# J/CHAVAKACHCHERI HINDU PRIMARY SCHOOL

# யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை




## SOUVENIR

## CEREMONIAL OPENING OF THE NEW BUILDING COMPLEX

## சிறப்பு மலர்

## புதிய கட்டடத் தொகுதி திறப்பு விழா

## 2009-09-03

# J/CHAVAKACHCHERI HINDU PRIMARY SCHOOL

# யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை

C.H.P.S

இளமையிற் கல்

LEARN YOUNG

SOUVENIR

## CEREMONIAL OPENING OF THE NEW BUILDING COMPLEX

## சிறப்பு மலர்

## புதிய கட்டடத் தொகுதி திறப்பு விழா

2007-09-03

# யா / சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை

**மகுடவாசகம்**

இளமையிற் கல்

**தொலைநோக்கு**

யாழ் மாவட்டத்தில் ஆரம்பக்கல்விக்கான முன்மாதிரிப் பாடசாலையாக விளங்குதல்

**செயற்பாடு நோக்கு**

உலகளாவியதும் தேசிய மட்டத்திலுமான கல்விக் கொள்கைகளுக்கேற்ப மேற்கல்வியை நோக்கி சிறந்த ஒன்றிணைந்த கல்வி மேம்பாட்டை அடைவதற்குத் தேவையான திறன்களை விருத்தி செய்தல்

# J/CHAVAKACHCHERI HINDU PRIMARY SCHOOL

**MOTTO**

Learn young

**VISION**

To be a leading model school for primary education in the Jaffna District

**MISSION**

Providing better integrated education in accordance with the Global and National Educational Policies, with the aim of creating opportunities to develop all the necessary skills needed for further education.

# பாடசாலைக் கீதம்

இராகம் : தர்பார்

### பல்லவி

வாழ்க ஆரம்ப பள்ளி வாழ்கவே
வாழ்கவே இந்து
ஆரம்ப பள்ளி வாழ்கவே வாழ்கவே

(வாழ்கவே)

### அனுபல்லவி

வாழ்க நம் மொழி வாழ்க நம் இனம்
வளங்கள் நிறைந்த ஈழம் ஓங்கவே


(வாழ்கவே)

### சரணம்


அன்பும் அறிவும் பண்பும் வளர
ஆற்றல் மிகு சிறார் மனம் துலங்க
உள்ளம் மலர்ந்து உலகம் புகழ
கல்வி வள நகர் சாவகச்சேரியில்

(வாழ்கவே)

## SITE PLAN - (OLD)
## J/CHAVAKACHCHERI HINDU PRIMARY SCHOOL




## SITE PLAN - (NEW)
## J/CHAVAKACHCHERI HINDU PRIMARY SCHOOL



# மலர் வெளியீட்டுக் குழு

## காப்பாளர்

திருமதி.சி.கந்தசாமி – அதிபர்

## துணைக்காப்பாளர்

திருமதி.ச.திருச்செல்வம் – உபஅதிபர்

## செயற்குழு

திரு.க.தவயோகராசா

திரு.யோ.லிங்கேஸ்வரன்

திரு.இ.கைலைநாதன்

திருமதி.ல.முகுந்தன்

திரு.கா.கமலநாதன்

# மலரின் உள்ளே.....

பக்கம்

1. ஆசியுரைகளும் வாழ்த்துரைகளும்................. 01

2. யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் வரலாற்றுக்குறிப்புக்கள் 33

3. J/Chavakachcheri Hindu Primary School A Brief survey 36

4. யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் புதிய கட்டடப்பரிணாமம்
திரு. கு. சிவபாலன் 38

5. Grade - 5 Scholarship Examination Result (1999 - 2008) 42

6. Our new School Complex Ground Floor Plan 43

7. Upper Floor plan 44

8. C.H.P.S. - Staff 2009 45

9. நன்றிக்குரியவர்கள் 46



# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வரின் அருளாசிச் செய்தி

தென்மராட்சிப் பிரதேசத்திலே நாவலர் பெருமானின் சிந்தனையின் வழியில் தோன்றிய யா / சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலைக்கென புதிய கட்டடத் தொகுதி திறப்பு விழா இடம் பெறுவது பேரானந்தம் தருகிறது. இதன் மூலம் பிள்ளைகளின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கான இடநெருக்கடியை இறைவன் தீர்த்து வைத்துள்ளார். ஆரம்பக்கல்வியின் முக்கியத்துவத்தை வெளிநாடுகளைப் போன்று நாமும் இன்று நன்கு உணர்ந்துள்ளோம். "ஐந்திலே வளையாதது ஐம்பதிலே வளையாது" என்பது ஆன்றோர் வாக்கு. எனவே சிறிய வயதிலேயே வளமான கல்வியையும் நல்ல பழக்க வழக்கங்களையும் ஊட்டி சிறந்த ஓர் அடித்தளத்தை கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. அதன்மூலம் பிள்ளைகளின் எதிர்கால கல்வி நன்றாக வளர்வதுடன் அவர்கள் சமூகத்திற்கு ஏற்றவர்களாக உருவாக்கப்படுகின்றனர். இதற்கெல்லாம் வாய்ப்பாக இத்திறப்பு விழா நடைபெறுதல் பாராட்டுதற்குரியது. மேலும் இம்மங்களகரமான திறப்பு விழாவன்று ஒரு சிறப்பு மலரை காலப்பதிவேடாக வெளியிடுவது தனித்துவம் மிக்கதாகும். இவையெல்லாம் சிறப்புற நடைபெற இறைவனை வேண்டி நல்லாசி கூறுகின்றோம். இந்தப்புதிய பாடசாலையை அமைத்துக் கொடுத்த சுவிஸ் நிறுவனத்தினர்க்கும் இந்த மகத்தான கல்விப்பணியில் ஈடுபடும் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், கல்வி மான்கள், மாணவச் செல்வங்கள் மற்றும் அனைவர்க்கும் எமது நல்லாசிகளைத் தெரிவிக்கின்றோம். மேலும் இப்பாடசாலை பல வளர்ச்சிகள் கண்டு மிளிர வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமகாசந்நிதானம்,
நல்லூர், யாழ்ப்பாணம்.



# திருக்கணித பஞ்சாங்க அதிபரின்
# ஆசியுரை


சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் புதிய கட்டடத்தொகுதி திறப்பு விழாவை முன்னிட்டு வெளிவரும் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

சாவகச்சேரியில் தேசியக் கல்லூரியாகிய இந்துக்கல்லூரிக்கு அண்மையில் ஆரம்பப் பாடசாலை சிறப்பாக இயங்கி வந்தது. மாணவர்களின் வரவும் அதிகரிக்க கற்றல் செயற்பாடுகளுக்கு இடம் போதாமல் இருந்தது.இதனால் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் ஆசிரியர் சங்க லண்டன் கிளையினரின் உதவியுடன் சப்பச்சிமாவடிப் பிள்ளையார் ஆலயத்துக்குச் சொந்தமான காணி கொள்வனவு செய்யப்பட்டது. இது விநாயகப் பெருமானின் திருவருளேயாகும். பாடசாலைக்குரிய கட்டடத் தொகுதியை சுவிஸ் நிறுவனத்தினர் நிறைவு செய்துள்ளனர். இதனால் சுவிஸ் நிறுவனத்தாருக்கும் பழைய மாணவர் சங்கத்தினருக்கும் சாவகச்சேரி மக்கள் நன்றி உடையவர்களாவர்.

எல்லாத் தருமங்களிலும் பார்க்க "ஏழைக்கு எழுத்தறிவித்தல்" சிறந்த புண்ணியச் செயலாக பாரதியார் கூறுகின்றார். ஆரம்ப பாடசாலையிலேயே மாணவர்கள் ஒழுங்கு, பண்பாடு, சக மாணவர்களுடன் அன்பு செலுத்துதல் போன்ற பாரம்பரியங்களைக் கற்றுக்கொள்கின்றனர். எனவே மாணவர்களை முன்னிலைப்படுத்துவதில் முக்கிய பங்கு கனிஸ்ட பாடசாலை அதிபர் ஆசிரியர்களுக்கே உரித்தானது என்று கூறுவதில் மிகையில்லை. இப்படியாகச் சிறப்பான செயற்பாடுகளால் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலைக்கு மாணவர்களின் வரவு அதிகரித்துக் கொண்டு வருகிறது எனலாம்.

தாமோதரம்பிள்ளை வீதியருகே நெடிதுயர்ந்த தோற்றத்தோடு விளங்கும் புதிய ஆரம்ப பாடசாலை அதிக மாணவர்களை உள்ளடக்கி கல்வி, கலை, விளையாட்டு முதலிய எல்லாச் செயற்பாடுகளிலும் முன்னணிப் பாடசாலையாக மிளிரவும். அதிபர், ஆசிரியர்களின் செயற்பாடுகள் மேலும் சிறக்கவும் மாணவர்கள் கல்வி, ஒழுங்கங்களில் சிறந்து விளங்கவும் எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலிக்க வேண்டுமென்று வழுத்தி ஆசி கூறி அமைகின்றேன்.

கலாபூஷணம்
சிவஸ்ரீ.சி.சிதம்பரநாதக்குருக்கள்
மட்டுவில்



# சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபை முதல்வரின் ஆசியுரை

கற்றறிந்த பெருமக்கள் பலர் தோன்றி கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு, கல்வி வளர்ச்சியில் மேம்பட்டு நிற்கும் தென்மராட்சிபதியினிலே ஆரம்பக்கல்வியின் அவசியத்தை உணர்ந்து சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் புதிய கட்டட திறப்பு விழாவிற்கு ஆசி வழங்குவதில் பெரு மகிழ்வு அடைகின்றேன்.

மாணவ செல்வங்களின் கல்வி வளர்ச்சி மேம்பட, இடப்பற்றாக்குறை அகல நற்சிந்தனையுடன் ஆலயத்திற்கு சொந்தமான காணியை வழங்க மனது கொண்டோரும் அதை கொள்வனவு செய்ய பெரும் மனது கொண்டு நன்றி மறவா சிந்தையுடன் நிதியுதவி வழங்கிய சாவகச்சேரியின் இந்து கல்லூரி லண்டன் மாநகர பழைய மாணவ சங்கத்தினரும் பாராட்டுக்குரியவர்கள்.

இக்கட்டட தொகுதியை பொறுப்பேற்று நிறைவு செய்த சுவிஸ் நிறுவனத்தினரையும் இப்பாடசாலை அதிபர் , ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் அனைவரையும் வாழ்த்துவதோடு புரட்டாதி மாதம் திறப்பு விழா காணும் இப்பாடசாலையானது மென்மேலும் வளர்ந்து கனிதந்து கல்வி பணி ஆற்ற வேண்டுமென நல்லாசி வழங்குகின்றேன்.

இத்திறப்பு விழா சிறப்படைய நல்வாழ்த்துக்கள் என்றென்றும்.......

வண.பிதா**K.J.W.**தேவசகாயம்
தென்னிந்திய திருச்சபை
சாவகச்சேரி.



# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

சிலையில் எழுத்தெனப் போற்றப்படும் இளமையில் கல்விக்கு வழியமைக்கும் ஆரம்பப் பாடசாலைகளில் அனைத்துச்செயற்பாடுகளும் நல்லதொரு நாளைய சந்ததிக்கு வழிகாட்டலாய் அமைகின்றன. இவ்வழியில் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை நன் மாணாக்கரை உருவாக்கும் பணியைச் செவ்வனே செய்து வந்த போதிலும் மாணவர் தொகைக்கேற்ப கற்றல் செயற்பாடுகளைச் செய்வதற்கு போதிய இடவசதியில்லை என்று பெருங்குறையாய் இருந்தது. இன்று யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க லண்டன் கிளையினரின் நிதியுதவியுடன் கொள்வனவு செய்யப்பட்ட காணியில் சுவிஸ் டெவெலப்மன்ட் கோப்பரேசன் (SDC ) என்ற நிறுவனம் கட்டடத் தொகுதியைப் பொறுப்பேற்று நிறைவு செய்து தந்துள்ளனர். காணிக் கொள்வனவிற்கும் கட்டடத் தொகுதியை நிறைவு செய்வதற்கும் உதவிய இருசாராரின் செயற்பாடுகளும் மகத்தானவையாகும். இன்று இக்கட்டடத் தொகுதியை உருவாக்கித் தருவதற்கு முன்னின்று உழைத்த அனைவருக்கும் இக்கட்டடத்தினால் பயனடையப் போகும் அனைத்து மாணவர்க்கும் இக்கட்டடத் திறப்பு விழா நாளில் என் மனமுவந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**உயர்திரு.க.கணேஸ்**
**அரசாங்க அதிபர்,**
**மாவட்டச் செயலர்,**
**யாழ் மாவட்டம்.**



# Message of Felicitation

It is a great pleasure for me to participate at this inaugurational ceremony on behalf of SDC (Swiss Agency for Development and coorperation)

Initiallay the project was planned to be completed by end of August 2006, Due to a new outbreak of the armed conflict we could only finish this project now.

SDC has made a lot of experiences in constructioning school houses in the Jaffna District. In the Hindu Primary School outcomes of lessons learnt were brought into this Project.

This school complex will be handed over with the hope that the parents community is taking a part of the responsibility in maintaining what SDC had realized. The nowadays standard should be kept up as learning object for all the children.

I wish the whole school Community a prosperous future!

**Hans Peter Etter**
**Head of SDC field Office Jaffna.**



# யாழ் பல்கலைக்கழக துணைவேந்தரின் ஆசிச்செய்தி

ஆரம்பக்கல்வி மேம்பாட்டின் அவசியம் இன்று பெரிதும் உணரப்படுகின்றது. "இளமையில் கல்" என்ற முதுமொழியின் அர்த்தமும் இன்றைய உளவியலின் ஆய்வுகளும் வேண்டி நிற்கும் ஆரம்பகல்வி இலட்சியத்திலே சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் இடம் குறிப்பிடத்தக்கது.

நிறைந்த பல ஆளுமைகளின் அத்திவாரமான இந்தப் பாடசாலை இன்று புதிய கட்டட வள மேம்பாட்டினை காணும் செய்தி மகிழ்ச்சி தருகின்றது.

ஊரை மறவாத, உறவுகளின் ஆதாரமான கல்விச் செல்வத்தினை மேம்படுத்தும் இத்திருப்பணியில் முன்னின்ற சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க இலண்டன் கிளையினரையும், சுவிஸ் நிறுவனத்தினரையும் நன்றியுடன் வாழ்த்துவோம்.

அழகிய நாளையின் நலமும் நம்பிக்கையும் இன்றைய பிள்ளைகளின் அறிவூட்டத்திலும் சமூகமயமாக்கத்திலுமே தங்கியுள்ளது. மங்கலமாய் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலைக்கான புதிய கட்டடத்தொகுதி திறந்து வைக்கப்படும் இந்த மேன்மையான பொழுதில் ஆரம்பகல்வி மேம்பாட்டுக்கான எங்கள் காலக்கடமையினை மேலும் உறுதியாய் முன்னெடுப்போம்.

**பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன்**
**துணைவேந்தர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**



# வடமாகாணக் கல்விச் செயலாளரின் ஆசிச்செய்தி

சாவகச்சேரி மண்ணின் ஆரம்ப பாடசாலையாக மிளிர்ந்து நிற்கும் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை தனது சிறந்த செயற்பாடுகள் மூலமாக சாவகச்சேரி பிரதேச கல்வி வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருப்பது கண்கூடு.

மேலதிக இடவசதி இல்லாத போதும் தனது சிறந்த கற்றல் கற்பித்தல் வழிகாட்டல் மூலம் சிறப்பான கல்வியை வழங்கி வந்ததையிட்டு அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு எனது மனம் நிறைந்த பாராட்டுக்கள் உரித்தாகட்டும்.

மேலும் பழைய மாணவர்களது ஒத்துழைப்புடன் சிறப்பாக நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத்தினூடாக உட்கட்டமைப்பு வசதியினை அதிகரிக்கச் செய்து தனது கல்விச் செயற்பாட்டினை அதிகரித்து சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள வேண்டுமென வாழ்த்துவதுடன் திறப்பு விழா சிறப்புற நிறைவேறவும் திறப்பு விழா மலரானது இனிதாக மலரவும் எனது ஆசிகளை வழங்குகின்றேன்.

இ. இளங்கோவன்
செயலாளர்,
கல்வி அமைச்சு, வடமாகாணம்.



# வடமாகாணக் கல்விப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி

"இளமையிற் கல்வி" என்னும் தொனிப்பொருளோடு கல்வி ஒளி பரப்பும் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழாவையொட்டி வெளியிடப்படுகின்ற சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்வெய்துகின்றேன்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியாக கால்பதித்து 1989ம் ஆண்டில் இருந்து சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையாக பரிணமித்த இப்பாடசாலை, இன்று தனக்கென ஒரு முத்திரையையும் பதித்து தன்னை உலகோர் புகழும் அளவுக்கு நிலைநிறுத்தியுள்ளது.

கல்வி அடைவுமட்டங்களில் மட்டுமன்றி விளையாட்டு, தமிழ்மொழித்தினம், ஆங்கில மொழித்தினம் மற்றும் இணைப்பாடவிதானம் சார்ந்த செயற்பாடுகளிலும் முதன்மை நிலையில் விளங்கி பாடசாலைசார் பண்புச் சுட்டிகளில் தன்னை உயர்நிலைப்படுத்திக் கொண்டது.

சாவகச்சேரி மக்கள் மட்டும் அன்றி வேறு பிரதேச மக்களாலும் இப்பாடசாலையின் பல்வகைப்பட்ட செயற்பாடுகள் ஈர்க்கப்பட்டு இப்பாடசாலை பலராலும் புகழப்படுகின்ற தன்மையை எம்மால் காணமுடிகின்றது.

பல்லாண்டுகாலமாக கல்விப்பணியாற்றி வரும் பாடசாலை புதிய கட்டடத் தொகுதியை புதுவளப்பெருக்காக கொண்டு விளங்குவதுடன், கல்விப் பணியை எதிர்வரும் சந்ததியினருக்கு பெருமையுடன் வழங்க வாழ்த்துவதோடு கட்டடத்திறப்பு விழாவோடு வெளிவருகின்ற இச்சிறப்பு மலர் சிறப்புற மலர்ந்து மணங்கமழ எனது நல்லாசிகள்.

வீ.இராசையா
மாகாணக்கல்விப் பணிப்பாளர்,
வடமாகாணம்,
திருகோணமலை.



# பிரதேச செயலரின் ஆசிச்செய்தி

செல்வங்களிலே சிறந்த செல்வம் கல்விச் செல்வமாகும். இச்செல்வத்தை மாணவர்க்கு அள்ளி வழங்கும் ஆலயம் பாடசாலையாகும். இளம் சிறார்களின் இக்கல்வித் தேவையை உணர்ந்து, பரோபகார சிந்தனையும் ஆரம்பக் கல்வியை ஊட்டிய பாடசாலை மீது கொண்ட அளவற்ற பற்றும் காரணமாக சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க லண்டன் கிளையினரால் மனமுவந்து அளிக்கப்பட்ட நிதியுதவியுடன் தாமோதரம்பிள்ளை வீதியில் கொள்வனவு செய்யப்பட்ட காணியிலே சுவிஸ் நிறுவனத்தினரால் இச்சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் கட்டடத்தொகுதி அழகுற அமைக்கப்பட்டமை சிறப்பு மிக்கதாகும். இக்கட்டட வேலைகள் பூர்த்தியடைந்து இதன் திறப்பு விழா 03.09.2009 வியாழக்கிழமை நடைபெறவிருப்பதையிட்டு அகமிக மகிழ்வடைகின்றேன்.

"இளமையில் கல்வி சிலையிலெழுத்து" என்பதற்கிணங்க ஆரம்பக் கல்வியே நமது வருங்கால சந்ததியினரது அடிப்படையாகும். மாணவர்களது அடிப்படைத்தேவைகள் செவ்வனே நிறைவேறும்போதுதான் மாணவர்கள் மகிழ்வுடன் கல்வி கற்பதில் ஈடுபடுவர். சகல வசதிகளும் அமையப்பெற்ற இப்புதிய கட்டடத்தொகுதி இம்மாணவர்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். "கல்வி கரையில கற்பவை நாள் சில" என்பதற்கிணங்க குறைந்த காலத்தில் நிறைந்த அறிவை இப்பாடசாலை மாணவர்க்கு அளிக்கும் என்று நம்புகிறேன்.

இத்திறப்பு விழா நிகழ்வுகள் இனிதே சிறப்புடன் நடைபெற்றிடவும் அதையொட்டி வெளிவரும் இச்சிறப்பு மலர் அழகு மிளிர மலர்ந்திடவும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.செ.ஸ்ரீநிவாசன்
பிரதேச செயலர்,
பிரதேச செயலகம்,
தென்மராட்சி,
சாவகச்சேரி.



# மாவட்ட நீதிபதியின் வாழ்த்துச்செய்தி

யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை புதிய இடத்தில் புதுப்பொலிவுடன் அமைக்கப்பட்டு தனது கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிக்கின்றமையை அறிந்து இறும்பூதெய்துகின்றேன்.

இற்றைக்கு இருபது (20) ஆண்டுகளாக சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் வளவில் இயங்கி வந்த சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் கொடுத்து உதவப்பட்ட காணியில் நிர்மாணிக்கப்பட்ட மிகவும் விசாலமான கட்டடத்தைக் கொண்ட பாடசாலையாக பரிணமித்துள்ளது.

சுமார் ஐந்நூறு (500) மாணவர்களும் இருபத்தைந்து (25) ஆசிரியர்களும் யாழ் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையுடன் தொடர்புடையவர்களாக உள்ளனர். குறித்த பாடசாலை மாணவர்கள் அண்மைய காலங்களில் தரம் ஐந்து (5) புலமைப்பரிசில் பரீட்சையில் மிகவும் உயர்ந்த பெறுபேறுகளை பெற்றுவருகின்றனர் என்பது பதிவுகளிலிருந்து தெரிய வருகின்றது. சம்பந்தப்பட்ட மாணவர்களின் தானாயமைந்த திறமைகளுக்கு புறம்பாக, அந்த மாணவர்களின் ஈடுபாடும் ஆசிரியர்களின் பங்களிப்பும் குறித்த பெறுபேற்றிற்கு காரணமாக அமைகின்றது. இந்நிலை யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் அதிபர் ஆசிரியர்கள் சமூகத்தில் உயர்ந்த ஸ்தானத்தையும் கௌரவத்தையும் பெறக் காரணமாகவுள்ளது.

மேற்படி பாடசாலை சாவகச்சேரி நகரைச் சேர்ந்த பெற்றோர்களுக்கு மிகவும் அரிய வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இதனை விட மீசாலை, சங்கத்தானை,கொடிகாமம், நுணாவில் போன்ற கிராமங்களைச் சேர்ந்த பெற்றோர்களுக்கும் மேற்படி பாடசாலையானது ஆரம்ப கல்வி தொடர்பில் மிகப்பெரிய வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இந்தவாறான ஒரு பாடசாலை தமது சொந்த இடத்தில், சொந்த கட்டடத்தில் செயற்படுவது, செயற்பாடுகளை முன்னெடுப்பது மிகவும் ஆறுதல் தரும் ஒரு தகவலாக உள்ளது. இளமையில் கல் என்ற மூதுரைக்கமைய யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை தமது மாணவச் செல்வங்களுக்கு ஸ்திரமான, நேர்த்தியான கல்விக்கான அத்திவாரத்தை இடுகின்றது. இந்த வகையில் இந்து ஆரம்ப பாடசாலையின் அதிபர் ஆசிரியர்கள் போற்றப்படவேண்டியவர்கள்.

யாழ் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை புதுப்பொலிவு பெறுவதனையிட்டு மனம் மகிழ்வதுடன் குறித்த பாடசாலையின் தீவிர வளர்ச்சியை எதிர்பார்த்துள்ள ஒருவன் என்ற வகையில் பாடசாலைக்கு சகல வளங்களும் கிடைக்கவும் சகல நிறைவுகளையும் கண்டு செயற்படவும் எல்லாம் வல்ல உலக நாயகனை வேண்டி யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவச்செல்வங்கள் அனைவருக்கும் மற்றும் பாடசாலை நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்தை தெரிவித்து உங்கள் அனைவரதும் பணி சிறக்கவேண்டுமென பிரார்த்தித்து வாழ்த்துக்களுடன் அமைகின்றேன்.

அன்னலிங்கம் பிரேமசங்கர்
மாவட்ட நீதிபதி.



# புதுப்பொலிவு பெறும் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை

இன்று சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை தனது கல்விப் பணியைப் புதிய கட்டடத்தொகுதியொன்றில் ஆரம்பிக்க உள்ளமை இப்பிரதேசக்கல்வியை நேசிக்கும் அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சியாகும். யாழ்ப்பாணத்துக் கல்விப் பாரம்பரியம் தனித்துவமாக வளர்ந்து வந்தமைக்கு கல்வியை நேசித்த சமூகப்பெரியார்கள் தாம் பிறந்த ஊர்களினதும் தம்மை வளர்த்த கல்லூரிகளினதும் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டமை ஒரு காரணமாகும். அத்தகைய மனோபாவம் இக்கல்லூரியின் பழைய மாணவர்களிடமும், ஆசிரியர்களிடமும் ஏற்பட்டமைதான் இப்புதிய கட்டடம் புதுப்பொலிவுடன் இன்று இப்பாடசாலையை அலங்கரிக்கக் காரணமாகும். இதனால் எம்மாணவர்களின் எதிர்கால நலன்கருதி, புதிய கட்டடத்திற்கான அத்திவாரத்தையிட பாடசாலைக்கென ஒரு காணியை வாங்கித்தந்த ஐக்கிய இராச்சியத்தில் வாழும் சாவ இந்துவின் பழைய மாணவர்களும் ஆசிரியர்களும் என்றும் எம் சமூகத்தின் நன்றிக்கும், பாராட்டுக்கும் உரியவர்காளவர். அதே வேளை ஆலயங்கள் வெறுமனவே ஆன்மீகப் பணியுடன் நின்றுவிடாது சமூகப்பணியையும் கல்விப் பணியையும் முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு இப்பாடசாலையின் புதிய கட்டடம் அமைய இருந்த நிலத்தை பிரதேச மக்களின் நன்மை கருதி நிலத்தின் சமகாலப் பெறுமதியைக் கருத்தில் கொள்ளாது அவற்றை வழங்கிய சப்பச்சிமாவடிப்பிள்ளையார் ஆலயத்தின் அறங்காவலரும் எம் நன்றிக்குரியவர்.

கடந்த இருபது ஆண்டுகளாக இப்பாடசாலை சிறிய கட்டடத் தொகுதியில் மிகக் குறைந்த வசதிகளுடன் இயங்கிய போதிலும் அதன் கல்வித்தரம் பலமிழந்து போகவில்லை. இந்நிலையில் இப்பாடசாலையின் எதிர்கால வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பலவசதிகளுடன் பாரியதோர் கட்டடத் தொகுதியையமைத்துக் கொடுத்திருப்பதன் மூலம் இப்பாடசாலைக்குப் புதிய வெளிச்சம் ஊட்டப்பட்டிருப்பதாக நம்புகிறேன். ஆகவே இந்நற்பணியைச் செய்த சுவிஸ் நாட்டின் வெளிநாடுகளின் அபிவிருத்திக்கான ஒத்துழைப்புக்கும் நிறுவனத்துக்கும், சுவிஸ் நாட்டின் மக்களுக்கும்

எமது பிரதேசம் என்றென்றும் நன்றியுள்ளதாக இருக்கும் என்பதில் எம்மவரிடையே கருத்து வேறுபாடே இராது. இக்கட்டடத்தொகுதியை எதிர்கால கல்வி வளர்ச்சிக்கு உகந்தவாறு பல பிரதான வசதிகளுடன் வடிவமைத்த பொறியியலாளர்களுக்கும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய கட்டுமாணப் பணியாளர்களுக்கும் தென்மராட்சி மக்கள் சார்பில் இவ்விடத்தில் நன்றி தெரிவிப்பதில் பேருவகை அடைகின்றேன்.

இப்புதிய கட்டடத் தொகுதி இவ்வாரம்பபாடசாலை வளர்ச்சியின் புதிய காலகட்டத்தைக் குறித்து நிற்கின்றது. ஆயினும் புதிய கட்டடங்கள் மட்டும் உயர்ந்த கல்வியின் அடையாளமாக இருந்துவிடாது. கடந்த இருபது ஆண்டு காலத்தில் பல சவால்கள் மத்தியிலும் கல்வியின் தரத்தை தொடர்ந்து தக்கவைத்த இப்பாடசாலை புதிய வளங்களோடு தொடர்ந்தும் வளரவேண்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே இன்று இப்புதிய கட்டடம் உருவாக்கப்பட்டுள்ளது. அந்த நோக்கம் வெற்றி பெற கல்லூரியின் அனைத்து வளங்களும் முறையாகப் பராமரிக்கப்பட்டு அவை இப்பாடசாலை மாணவர்கள் அனைவருக்கும் பயன்படும் வகையில் அவற்றின் செயற்பாடுகளைப் பன்முகப்படுத்துவது அவசியமாகும். அதை இப்பாடசாலை ஆசிரிய குழாமும் பாடசாலைச் சமூகமும் முழுமையாக நிறைவேற்றும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. இதன் மூலம் எதிர்காலத்திலும் இப்பாடசாலையின் அபிவிருத்தியில் வெளிநாடுகளில் வாழும் எம் உடன் பிறப்புக்கள் அதீத அக்கறை கொள்ள தூண்டப்படுவார்கள் என்ற நம்பிக்கையும் எனக்குண்டு.

புதிய கட்டடத் திறப்பு நிகழ்வுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மகிழ்ச்சி கொள்ளும் நான் எமது சமூக விழுமியங்களை, எமது பாரம்பரிய பண்பாட்டு அடையாளங்களை பேணக்கூடிய ஒழுக்கம் நிறைந்த இளம் மாணவ சமுதாயத்தை உருவாக்குவதில் இப்பாடசாலை என்றென்றும் புதுப்பொலிவுடன் திகழ எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய பிரார்த்திக்கின்றேன்.

**பேராசிரியர் க.கந்தசாமி**
**பௌதீகவியற்றுறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



# சமுதாயச் சிற்பிகளை உருவாக்கும் ஆலயம்

கற்றோர் சமுதாயமான தென்மராட்சிப் பிரதேசத்தின் இயற்கை வளத்திற்கேற்ப மனித வளமும் பிரகாசமானதாகும். அத்தகைய பிரதேசத்தில் கல்வி அடைவுகள் எப்போதும் மேலோங்கியதாகவே இருக்கும். யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையும் மேலோங்கிய அடைவை உடைய பாடசாலையாகும். எம் முன்னோர்களால் உருவாக்கப்பட்ட இப்பாடசாலையை வளங்கள் மிக உடையதாக மாற்றுவதற்கு இப்பாடசாலையின் அதிபர் முக்கியமானவராகத் திகழ்கின்றார். இப்பாடசாலையின் பழைய மாணவர்களை ஒன்றிணைத்து ஏறக்குறைய மூன்று ஏக்கர் நிலத்தைக் கொள்வனவு செய்து பாடசாலையை விஸ்தரிக்கக் கூடியதாக உள்ளது. இப்பாடசாலை மாணவர்களே ஏனைய பெரிய பாடசாலைகளின் அடைவிற்கு காரணமானவர்கள் என்றால் மிகையாகாது. இங்கு ஊட்டப்படும் ஆரம்பக்கல்வி எழுமைக்கும் ஏற்றதாக உள்ளது. இதனால் இப்பாடசாலை இப்பிரதேசத்தின் கல்வியில் தூணாக, அத்திவாரமாகத் திகழ்கின்றது. இக்காணியில் தாபிக்கப்பட்ட பாடசாலையில் மாணவர்கள் தமது செயற்பாடுகளை சுயமாக, சுதந்திரமாகச் செய்யக்கூடியதாக உள்ளது. எனவே இப்பாடசாலை சகல வளங்களையும் வருங்காலத்தில் பெற்று எமது சமுதாயம் சிறந்த கல்வியை மகிழ்ச்சியுடன் பெற்று ஏற்றமுற எனது வாழ்த்துக்கள்.

"உற்றுழி உதவியும் உறு பொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்கை நன்றே"

**வே.தி.செல்வரத்தினம்**
**மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்**
**யாழ்ப்பாண மாவட்டம்**



# புது மனைபுகும்
## இந்து ஆரம்ப பாடசாலை

புதுப்பொலிவுடன் நாற்பது பரப்பு காணியில் பல முன்னேற்றகரமான வடிவமைப்புடன் அமைக்கப்பட்டுள்ள இந்து ஆரம்ப பாடசாலையில் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர் மற்றும் ஊழியர்கள் பெரியோர்கள் வாழ்த்தவும் இறைவன் அருள் செய்யவும் குடியேறும் நிகழ்வை எனது பாடசாலைக் கட்டட பகுதி சார்பாக வாழ்த்தி பங்கெடுப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இந்நிகழ்ச்சிக்கு வித்திட்ட முன்னாள் அதிபர்,தற்போதைய அதிபர் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், Mr.Rudolf Fankhauser, Petersmith, Bead Klein, Esther Portmann, Hugo Gisler , Hans peter Etter, SDC நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் ஆகியோரின் முயற்சியின் பயனாக பாடசாலை கட்டடம் மிகுந்த அழகுடனும் உச்ச பயன்பாட்டிற்கான வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் உழைத்த பொறியியலாளர்களான திரு குகானந்தன், செல்வி தர்சனா, திரு.பரணிதரன், திரு சிறீகாந்தா, மற்றும் பாடசாலை வேலைப்பகுதியை சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் மேற்பார்வை செய்த திரு.கு.செல்வராஜா, திரு.க.ரமேஸ், திரு.சு. சதீஸ், ஆகியோருக்கும் வலயக்கல்விப் பணிப்பாளர்கள், அதனைச்சார்ந்த உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கும் நன்றி கூறி வாழ்த்துகின்றேன். இக்கட்டட ஒப்பந்தத்தை முதலில் பொறுப்பெடுத்து அத்திவார வேலைகளை ஒப்பேற்றிய ஒப்பந்தகாரர் ராமச்சந்திரன் அவர்களையும் மீள ஒப்பந்தம் கோரப்பட்ட பொழுது பொறுப்பேற்று நல்லமுறையில் குறுகிய காலத்தில் கட்டடத்தை பூர்த்தி செய்து கையளித்த திரு.சி.உருத்திரலிங்கம் (Ruhlins Ltd) ) அவர் சார்ந்த ஊழியர்களையும் வாழ்த்தி நன்றி கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மாணவர்கள் ஆசிரியர்கள் இப்பாடசாலை கட்டட வசதிகளையும் வளத்தையும் பல நூற்றாண்டுகள் பராமரித்து பயன்பெற இறைவனிடம் ஆசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

**கு.சிவபாலன்**
**பாடசாலை வேலைகள் பொறியியலாளர்**
**மேலதிக மாகாணக்கல்விப் பணிமனை**
**யாழ்ப்பாணம்**



# Message of Appreciation

It is with great delight and happiness along with certain pride I wish to state that the school which is to be inaugarated and became a reality because of the philanthropic gesture shown by the swiss Government.

Length and breath of this page would not suffice if I am to mention the names of the people who put in their hard work to bring about this project a success which in turn is going to groom, mould and fashioned many a children who are the future valuable generation which though give all of us great pleasure and pride.

I, Personally and on behalf of the Srilankans, earnestly thank and show our gratitude to the Swiss people and their government for the kind gesture exhibited.

I would be failing in my duty if I do not thank the capable and competent personality Mr.Hans Peter, Head of field Office, Jaffna, who has been a pillar of strength to us and guided us till the end of the project.

I wish sincerely all the very best to the school and the students who are goingt to be tremendously benefited.

**R. Srikantha**
**Engineer to the project ,**
**SDC , Jaffna.**



# Message from the Zonal Director of Education Thenmaradchy

I am amazed and excited to see the striking beauty of these new premises, and my ecstasy grows, feeling that these belong to our kids, so we strongly believe a step forward in our mission.

Chavakachcheri Hindu Primary School looks more beautiful in her new premises. All look a new. Thanks to the funders, the SDC on behalf of the Government and people of Switzerland and the Alumni Association of Chavkachcheri Hindu College based in London.

I am conveying these greetings to a very impressive and deeply touching ceremony. Today the new building is being handed over to the school administration, surely a memorable event for them. It is the most generous and pretty gift to our community from the SDC and the Alumni Association of Chavakachcheri Hindu College, London.

Chavakachcheri Hindu Primary School received on immense treasure from the Alumni Association of CHC in U.K. to purchase the land which belonged to Sappachchimavady Pillaiyar Temple. They Contributed their timely fundings, and their intensive efforts paved the way for these huge buildings.

Looking around the premises in and outside, we feel the environment friendly The trees are not cut down for construction work. They remain green. Leaves are dancing in the air. Recycling is another salient feature I have ever observed in one of our schools. This of course will motivate the young children to utilize the wastes for another purpose These remind me of the words in a song book.

"Ah! how my heart beats with rapture a new
Let this valuable treasure be a sunrise
Gift from God to us, thus we honour
the gift and the sender".

May the Almightly God supply wisdom and strength to our endeavours.

**K.Premakanthan,**
**Zonal Director of Education,**
**Thenmaradchchi.**



# அமைதியான சூழலில் ஓர் அறிவுச்சாலை

மிகுந்த இட நெருக்கடிக்கு மத்தியில் இதுவரை நாளும் கல்விப் பணியாற்றிய யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை இன்று புதுப்பொலிவுடன் காணப்படும் புதிய வளாகத்தில் கால்பதிப்பதை நினைத்து எனது மனம் பூரிப்படைகின்றது.

இதுநாள் வரை ஒரு புறாக்கூட்டுக்குள் நாங்கள் அடைக்கப்பட்டுள்ளோம் என்ற உணர்வோடு தமது கல்வியைத் தொடர்ந்த இம்மாணவச் செல்வங்கள் இனிமேல் சிறகடித்துப் பறக்கின்றோம் என்ற மனச்சந்தோசத்தோடு பள்ளி வருவதை நாங்கள் காணலாம்.

கல்வியோடிணைந்த பிற பாடவிதானச் செயற்பாடுகளுக்கு வேறு இடங்களை நாடிச் சென்ற இப்பிள்ளைகள் இனிவருங்காலங்களில் தென்மராட்சியில் சாதனை படைப்பர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. சிறந்த நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள் மிகவும் ரம்மியமான சூழலில் அமைக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது.

தென்மராட்சியில் இருக்கின்ற ஆரம்ப பாடசாலைகளில் அதிக பிள்ளைகளை உள்வாங்கிய ஒரே ஒரு பாடசாலை இதுவாகும். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதிக மாணவர்களை தேர்ச்சி பெற வைக்கும் இப்பாடசாலை இனிவரும் காலங்களில் தனது தேர்ச்சி வீதத்தை உயர்த்த இக்களநிலையும் ஏதுவாக அமையும்.

இவ்வளவு பெரிய காணியை பெற்றுத்தர பேருதவி நல்கிய சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவ சமூகத்தினர்க்கும், இவ்வாறு நவீன வசதிகளுடன் கூடிய மிகவும் அழகான கட்டடத் தொகுதியினை கட்டித்தந்த சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தினருக்கும் (SDC) எனது மனம் நிறைந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நான் இப்பகுதியில் கல்விப்பணிப்பாளராக இருந்த காலப்பகுதியில் இக்கட்டடத்தின் ஆரம்பப்பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இன்று கட்டட வேலைகள் பூர்த்தியடைந்து பாடசாலை கற்றற் செயற்பாடுகளுக்காக கால்பதிப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

எதிர் காலத்தில் தென்மராட்சியில் மழலைகளின் கல்விச் சொத்தாக இப்பாடசாலை விளங்க வேண்டுமென வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

**திருமதி.அ.வேதநாயகம்**
**கல்விப்பணிப்பாளர்**
**யாழ்ப்பாண கல்வி வலயம்**



# வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை கற்றலுக்கான வளங்களனைத்தையும் கொண்ட புதிய கட்டடத்தில் அமைவது கண்டு மட்டிலா மகிழ்ச்சியடைகின்றேன்.

1904ஆம் ஆண்டு சாவகச்சேரி சந்தைக்கு அண்மையில் திரு.வி.தாமோதரம்பிள்ளையவர்களால் சைவத் தமிழ்க்கலவன் பாடசாலையாக இது ஆரம்பிக்கப்பட்டது. படிப்படியாக இப்பாடசாலை வளர்ச்சியடைந்து தென்மராட்சி மக்களின் அறிவாலயமாக மிளிர்ந்தது.

1989 ஆம் ஆண்டு இப்பாடசாலையின் ஆரம்ப பிரிவு இந்து ஆரம்ப பாடசாலை என்ற பெயருடன் தனித்து இயங்கத் தொடங்கியது. ஆயினும் போதிய இடவசதியின்றி நெருக்கமான வகுப்பறைகளிற் கற்றற் செயற்பாடு இடம்பெறலாயிற்று. 1998ஆம் ஆண்டு இப்பள்ளிக்கூடத்தின் அவல நிலையைக் கண்டு புதியதொரு இடத்தில் இப்பாடசாலை அமைக்கப்படவேண்டுமென்ற எண்ணத்தைப் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகளுக்குத் தெரிவித்தேன். இதன் தொடராக சப்பச்சிமாவடி விநாயகர் ஆலயத்திற்குச் சொந்தமான காணியைப் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகளுடன் சென்று பார்வையிட்டோம். 2000 ஆம் ஆண்டு இப்பிரதேசத்திலேற்பட்ட யுத்தம் காரணமாக எமது முயற்சியிற் பின்னடைவு ஏற்பட்டது. இப்பிரதேச மக்களின் மீள் குடியமர்வின் பின்னர் மீண்டும் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் முயற்சியால் சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் ஐக்கிய இராச்சிய பழைய மாணவர்கள் ஆசிரியர் சங்க நிதியுதவியுடன் ஆலயக்காணி வாங்கப்பட்டுக் கட்டடம் கட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலைக் கட்டடத்திற்கு நிதியுதவியை வழங்கிய சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனத்திற்கு இப்பாடசாலைச்சமூகம் என்றுமே நன்றி கூறும்.

புதிய கட்டடத்தில் அமையும் இந்து ஆரம்ப பாடசாலை எதிர்காலத்தில் மேலும் வளர்ச்சியடைய வாழ்த்துகின்றேன்.

**வ.செல்வராசா**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வடமராட்சி.**



# தென்மராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் தரம் *III* பாடசாலையான யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை இந்துப் பாரம்பரியத்தில் வளர்ந்த ஒரு பாடசாலையாகும். இது 1989ம் ஆண்டில் யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இருந்து பிரிந்து தனித்துவமான ஆரம்ப பாடசாலையாக மிளிர்கின்றது.

14 ஆசிரியர்களுடனும் 889 மாணவர்களுடனும் ஆரம்பமாகிய இப்பாடசாலை இன்று பல கல்விமான்களையும் பொறியியலாளர்களையும் ஏன் ஒட்டு மொத்தமாகக் கூறின் நல்ல ஓர் அறிவு சார் சமூகத்தையும் உருவாக்கி தனக்கென ஒரு தனி நடைபோடுவது இன்று நாம் காண்கின்ற ஒரு காட்சியாகும்.

தென்மராட்சி கல்வி வலயத்தின் எல்லையையே தனது மாணவர் ஏந்தும் பிரதேசமாக (Catchment Area) கொண்டு விளங்கும் இப்பாடசாலை இன்று தனது பாடசாலையின் நோக்குக் (Vision) கேற்ப யாழ் மாவட்ட ஆரம்பப்பாடசாலைகளில் ஒரு மாதிரிப் பாடசாலையாக விளங்கும் தன்மைக்கேற்ப செயற்பட்டு வருவது எம்மை மகிழ்ச்சிப்படுத்தும் ஒரு செயற்பாடாகும்.

மேலும் பாடசாலை என்பது பிள்ளை நேயப் பாடசாலையாக அமைதல் வேண்டும் என்பது தத்துவமாகும். இதற்கேற்ப இப்பாடசாலையில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் சமூகத்திற்கிடையே ஓர் உணர்வு காணப்படுவது இதன் வளர்ச்சிக்கு ஒரு படியாகும்.

இதுவரை காலமும் கட்டட, பௌதீகவளப் பற்றாக்குறையுடன் இயங்கிய இப்பாடசாலை சகல வளம் கொண்ட பாடசாலையாக மாறிவருவது கண்டு நாம் மகிழ்ச்சியடைவதுடன் சுவிற்சலாந்து அபிவிருத்தி நிறுவனத்திற்கு (SDC) நன்றி கூறுகின்றோம்.

இப்பாடசாலை மேலும் மேலும் வளர இறை ஆசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

**கோ.வரதராஜமூர்த்தி**
**பிரதிக்கல்விப் பணிப்பாளர்**
**(கல்வி நிர்வாகம்)**
**கல்வி வலயம், தென்மராட்சி.**



# சாவகச்சேரி இந்துக்கல்லூரி முதல்வரின் வாழ்த்துச் செய்தி

தென்மராட்சியின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றிவரும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி 1904ம் ஆண்டு அமரர் வி.தாமோதரம்பிள்ளை அவர்களின் தூரநோக்கான சிந்தனையால் உருவாக்கப்பட்டது. ஆரம்பக்கல்வியையும் இடைநிலைக் கல்வியையும் வழங்கி வந்த இந்து அன்னை 1989ம் ஆண்டில் தனது எண்பத்தைந்தாம் அகவையில் "சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை" என்ற பெயரில் தனது ஒருபகுதிக் கட்டடத் தொகுதியில் தனித்துவமாக இயங்கும் பாடசாலையாக்கி ஆரம்பக் கல்வி மேம்பாட்டுக்கு உதவியது. அதன் ஆரம்ப அதிபராக திரு.வ.கயிலேஸ்வரன் நியமிக்கப்பட்டார்.

மிகக் குறைந்த வளத்துடன் சிறிய காணிப்பரப்பில் இருபது வருடங்கள் பணியாற்றிய இப்பாடசாலை இன்று புதிய காணியில் புதிய கட்டடத்தில் இயங்க இருப்பது எமக்கெல்லாம் பெரு மகிழ்வைத் தருகின்றது. இப்பாடசாலைக்கென சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்தினர் நாற்பது பரப்பு அளவான, சப்பச்சி மாவடிப் பிள்ளையார் ஆலயத்திற்குச் சொந்தமான காணியைக் கொள்வனவு செய்ய பண உதவி வழங்கினர்.

சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனத்தினர் தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தினரின் சிபார்சுடன் இலங்கையில் தலைசிறந்த முன்மாதிரி அமைப்புடன், அழகான மிக வசதியான பெறுமதியான பாடசாலை வளாகத்தினை உருவாக்கி தென்மராட்சி மழலைகளுக்காக இந்து ஆரம்ப பாடசாலை நிருவாகத்தினருக்கு கையளித்துள்ளனர்.

பெற்றோரும் நலன்விரும்பிகளும் பாடசாலைச் சூழலை கவின் நிலைப்படுத்தியுள்ளனர். இன்றைய அதிபர் திருமதி.சி.கந்தசாமி, ஆசிரியர்கள் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் இதற்காக தம் உழைப்பை நல்கி உள்ளனர்.

இவர்கள் அனைவரதும் முயற்சி சிறந்த கல்விச் சமூகம் ஒன்றின் அத்திவாரமாக விளங்க உள்ளது. ஒட்டு மொத்தமாக அனைவரதும் முயற்சியையும் பாராட்டுவதுடன் இக்கல்லூரியின் வளம் பெருகிட சப்பச்சிமாவடிப் பிள்ளையாரின் ஆசியை வேண்டிப் பணிவதுடன் சாவகச்சேரி இந்துக்கல்லூரிச் சமூகத்தினரின் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன்.

**அ.கயிலாயபிள்ளை**
**அதிபர்**
**யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி**



# கோட்டக்கல்வி அலுவலரின் வாழ்த்துச் செய்தி

மாற்றமுறும் சமுதாயத்தை ஏற்றமுறும் நிலைக்கு இட்டுச்செல்கின்ற வகையிலே பாடசாலைகளின் பங்கும் பணியும் அளப்பரியதாக அமைந்து விடுகின்றது. அந்த வகையிலே தென்மராட்சிப் பிரதேசத்தின் மத்தியில் ஒளி வீசிக்கொண்டிருக்கும் யா/சாவக்சேரி இந்து ஆரம்ப பாடசாலையானது 1904ம் ஆண்டு சாவகச்சேரி இந்துக்கல்லூரியுடன் இணைந்து முதன் முதலாக சாவகச்சேரி சந்தைக்கு அண்மையில் ஒரு சைவத் தமிழ் கலவன் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது. 1905ஆம் ஆண்டு சங்கத்தானைக்கு மாற்றப்பட்டு சிறப்பாக இயங்கி வந்த காலத்தில் இதன் அபரிமிதமான வளர்ச்சியால் 1989ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் 1 தொடக்கம் 5 வரையான வகுப்புக்களுடன் "இந்து ஆரம்ப பாடசாலை" என்ற பெயருடன் தனியாகப் பிரிந்து இயங்கத் தொடங்கியது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஆரம்பக் கல்வியில் முதல் நிலையில் வீறுநடை போடும் இப்பாடசாலையானது 2000ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த அனர்த்தத்தினால் பாடசாலைக் கட்டடங்களும் சொத்துக்களும் பெருமளவில் சேதமடைந்த போதிலும் பிற்பட்ட காலத்தில் இவை ஓரளவு சீர்செய்யப்பட்டு, இடப்பற்றாக்குறை வளப்பற்றாக்குறை போன்ற அரைகுறை வசதிகளுடனும், அதிக மாணவர் தொகையுடனும் சிறப்பாக இயங்குகின்ற இவ்வேளையில் இப்பாடசாலைக்கென புதிய இடத்தில் நவீன வசதிகள் கொண்ட மாடிக் கட்டடங்களுடன் 2009ம் ஆண்டு புரட்டாதி மாதத்தில் ஆரம்பமாகவுள்ள இப்பாடசாலையானது அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் ஆகிய அனைத்துத் தரப்பினரையும் பங்காளிகளாக்கி, மேலும் மேலும் வளர்ந்து சரித்திரம் படைக்கும் சாதனையாளர்களை எமது பிரதேசத்திற்கு வழங்கி பேருயர் பெருமைகள் பல சேர்த்திட வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி நல்லாசிகள் பல நல்கி உளமாரப் போற்றுகின்றேன்.

திரு.கு.சிவானந்தம்
கோட்டக்கல்வி அலுவலர்
கோட்டக்கல்வி அலுவலகம்
சாவகச்சேரி.



# ஓய்வு பெற்ற சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலரின் ஆசிச்செய்தி

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

எண்பதுகளில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் ஆரம்பவகுப்பு தனித்துவமாக இயங்க ஆரம்பித்தது. அன்றிலிருந்து இன்றுவரை அடிப்படை வசதிகள் ஏதுமற்றதாக பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் இயங்கிய போதிலும் தென்மராட்சி பிரதேசத்தின் முதல்தரமான ஆரம்ப பாடசாலையாக இயங்கி வந்துள்ளமை யாவரும் அறிந்ததே.

இந்து ஆரம்ப பாடசாலை தனித்து இயங்கிய பொழுதும் இந்துக்கல்லூரியின் ஓர் அங்கமாகவே சமூகத்தில் கருதப்பட்டது. எனவேதான் சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க இலண்டன் கிளையினர் இந்து ஆரம்ப பாடசாலை பல வசதிகளையும் கொண்ட பாடசாலையாக உருவாக இந்துக்கல்லூரியின் தாபகரின் வழித்தோன்றலின் பொறுப்பிலிருந்த காணியை கொள்வனவு செய்ய நிதி வழங்கியது. 2006ம் ஆண்டு சுவிஸ் அபிவிருத்தி நிறுவனம் புதிய கட்டடத்திற்கான நிதி உதவியை வழங்கியது. இந்நிதி பெறுவதற்கு அப்போதைய அதிபர் திரு.வ.கயிலேஸ்வரன், முன்னாள் கல்விப்பணிப்பாளர் திரு.வ.செல்வராசா ஆகியோரின் பங்களிப்பு நினைவு கூரத்தக்கது. 2006 ஆவணியில் தடைப்பட்ட கட்டடவேலைகள் மீண்டும் இவ்வாண்டு புதுப்பிக்கப்பட்டு நிறைவுற்றுள்ளமை மனநிறைவைத் தருகின்றது. 140 அடி நீளமான இரண்டு இரு மாடிக்கட்டடங்கள் கிடைக்கப்பெற்றுள்ளமை இப்பாடசாலை இதுவரை அனுபவித்த கஸ்டங்களுக்கெல்லாம் கிடைத்த வெகுமதியென்றே கொள்ளலாம்.

இப்பாடசாலை யாழ் மாவட்டத்தில் உள்ள ஏனைய ஆரம்ப பாடசாலைகளுக்கெல்லாம் முன்மாதிரியான பாடசாலையாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. பாடசாலைக்கான புதிய வளத்தைப் பெற்றுக்கொடுப்பதில் முன்னின்று உழைத்த அனைவருக்கும் நன்றி கூறுவதோடு முன்னணிப்பாடசாலையாக மேன்மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

திரு.நா.சத்தியநாதன்
ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அலுவலர்
பிரதிக்கல்விப் பணிப்பாளர்(திட்டமிடல்)
சாவகச்சேரி.



# யா/சாவகச்சேரி இந்து கல்லூரி பழைய மாணவர் ஆசிரியர் சங்கம் ஐக்கிய இராச்சிய கிளையின்

# வாழ்த்துச் செய்தி

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை புரட்டாதி மாதம் முதல் வாரத்தில் புதிய இடத்தில் ஆரம்பிக்கப்படுவதையிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க பிரித்தானிய கிளையின் சார்பில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க பிரித்தானிய கிளையின் கடின உழைப்பால் சேகரிக்கப்பட்ட பணத்தில் 19.02.2004ல் கொள்வனவு செய்யப்பட்ட நிலத்தில், நவீன வசதிகள் கொண்ட புதிய மாடி கட்டட தொகுதியில் இந்து ஆரம்ப பாடசாலை ஆரம்பிக்கப்படுவதையிட்டு எமது சங்கம் இரட்டிப்பு மகிழ்ச்சியடைகின்றது.

யாழ் மாவட்டத்திலேயே சிறந்த முறையில் நிர்மாணிக்கப்பட்ட இவ் ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்கும் இளஞ் சிறார்கள் வருங்காலத்தில் பல்துறைசார் விற்பன்னர்களாக மிளிர வேண்டுமெனவும், இவ் ஆரம்ப பாடசாலையில் கடமைபுரியும் அதியர் ஆசிரியர்கள் அனைவரும் சகல செல்வங்களும் பெற்று நலமுடன் வாழவும், இவ் ஆரம்ப பாடசாலை தென்மராட்சி மக்களுக்கு பல்லாண்டு காலம் சேவை செய்யவும் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

ச.கிருஸ்ணமூர்த்தி
சாவகச்சேரி இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம்,
இலண்டன்.

# யா/சாவகச்சேரி இந்து கல்லூரி
# பழைய மாணவர் ஆசிரியர் சங்கம்
# நோர்வே கிளையின்
# வாழ்த்துச் செய்தி

ஒரு நூற்றாண்டிற்கு மேலாக, தனது அரும் பெரும் கல்விப் பணியை மிகவும் திறம்பட ஆற்றிக்கொண்டிருக்கும் இந்துக்கல்லூரியானது 1904ம் ஆண்டு ஆரம்ப பாடசாலையாகத்தான் தோற்றம் பெற்றதென்பது யாவரும் அறிந்தவிடயமே. அதே போல் அன்று தொடக்கம் இன்றுவரை கல்லூரியின் வளர்ச்சியில் ஆரம்பப் பாடசாலையின் பங்கும் முக்கியமானதாகவே இருந்துவருவதென்பதும் எல்லோருக்கும் தெரிந்தவிடயம். அப்படிப்பட்ட இந்து ஆரம்பப்பாடசாலையானது புதிய கட்டடத் தொகுதியினுள் காலடி எடுத்து வைப்பதையிட்டு நோர்வேயிலுள்ள பழையமாணவர்களாகிய நாம் மிகவும் மகிழ்வடைகின்றோம்.

இப்புதிய கட்டடத் தொகுதியின் ஆக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் அர்ப்பணிப்புடன் உழைத்த அனைவரும் பாராட்டப்படவேண்டியவர்களே. வாழ்க! உழைத்த அனைவரதும் இலக்கை இப்பாடசாலை அடையும் என்பதில் எந்தவித ஐயப்பாடும் கிடையாது.

ஆரம்பப்பாடசாலையானது தனது கல்விப்பணியை மென்மேலும் முன்னெடுத்துச்செல்ல நோர்வே பழைய மாணவர்களாகிய நாமும் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

**மு.சிவபாலன்**
**தலைவர்,**
**இந்துக்கல்லூரி பழைய மாணவர் ஒன்றியம்,**
**நோர்வே.**



# முன்னாள் அதிபரின் ஆசிச்செய்தி

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் ஆரம்ப பிரிவாக இயங்கி வந்த பாடசாலை தனியான நிர்வாகத்தின் கீழ் இந்து ஆரம்ப பாடசாலையாக பரிணாமம் பெற்ற வேளையில் அதன் அதிபர் பொறுப்பை ஏற்க வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது. அன்று தொடக்கம் 20.02.2007 இல் இளைப்பாறும் வரை இப்பாடசாலையை நிர்வகிக்கும் பொறுப்பு இருந்தது. சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் சீரான நிர்வாக வசதிக்காகவும் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கல்வித் தரத்தை மேலும் மேம்படுத்தும் நோக்குடனேயும் உருவாகியதே இந்து ஆரம்ப பாடசாலையாகும்.

பாடசாலையை ஆரம்பித்து வைத்த அன்றைய கல்விப் பணிப்பாளர்களின் ஏகோபித்த அபிப்பிராயம் இப்பாடசாலை தனக்கென ஓர் இடத்தை தேடி பல்வேறு வசதிகளுடன் கூடியதாக தென்மராட்சியின் ஒரு சிறந்த ஆரம்பப் பாடசாலையாக திகழவேண்டும் என்பதே. அவர்களின் முதல் நாள் சம்பவத்திரட்டுக்குறிப்பில் இதனை குறிப்பிட்டுள்ளனர். யோகர் சுவாமிகள் அருள்வாக்கான "எப்பவோ முடிந்த காரியம்" என்பதே இன்று என்மனதில் தோன்றுகிறது. 1989ம் ஆண்டு ஏற்பட்ட நல்ல சிந்தனை இருபது ஆண்டுகளின் பின் 2009.09.03 இல் செயல் வடிவம் பெறுவது கண்டு மிக்க மனமகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பாடசாலையின் தாய்ப்பாடசாலையான சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பூரண ஆதரவினைப் பெற்று அக்கல்லூரியின் பழைய மாணவர் ஆசிரியர் சங்க லண்டன் கிளையினரின் உபகரிப்பினால் சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் தாபகர் தாமோதரம்பிள்ளை அவர்களின் நன்கொடையாக சப்பச்சிமாவடி விநாயகர் ஆலயத்திற்கு வழங்கப்பட்ட 40 பரப்புக்காணியை மிகவும் குறைந்த விலையை அவ்வாலயத்தின் பரிபாலனத்திற்கென வழங்கி இப்பாடசாலை பெற்றுக் கொண்டுள்ளது. இப்பணிக்கு ஒத்துழைப்பு வழங்கிய ஆலய பரிபாலன தர்மகர்த்தாவான திரு.சரா தாமோதரம்பிள்ளை அவர்களுக்கும், ஆலயத்தினருக்கும், இந்துக்கல்லூரி நிர்வாகத்தினருக்கும் பழைய மாணவர் சங்க லண்டன் கிளையினருக்கும் பாடசாலைச் சமூகம் என்றும் நன்றிக் கடமைப்பாடுடையது.

இந்த நிலையில் பாடசாலைக்கான கட்டடத்தொகுதியை அமைப்பதற்கு வழிசமைத்த யாழ்ப்பாண சுவிஸ் நிறுவனத்தினருக்கும் நன்றி கூறவேண்டும்.

எனது சேவைக்காலத்தில் இப்பணிகளை மேற்கொள்ளவும் கட்டட அத்திவாரம் இட்டு ஓரளவு வேலைகள் தொடங்கிய நிலையில் இப்பாடசாலையின் அதிபர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட தற்போதைய அதிபர் திருமதி சி.கந்தசாமி அவர்களும் ஆசிரியர்களும் பெற்றோரும் மாணவர்களும் இதனைப் பூர்த்தி செய்து பாடசாலையை இங்கு ஆரம்பித்து வைப்பதற்கு பெரிதும் பணியாற்றியுள்ளனர்.

இந்துக்கல்லூரி கல்வியாளர்களின் நற்சிந்தனை நிறைவுபெற்ற இந்த நல்ல நாளில் பாடசாலையை வளம் பெற வாழ்த்துகின்றேன்.

**திரு.வ.கயிலேஸ்வரன்**
**இளைப்பாறிய அதிபர்**
**யா/சாவகச்சேரி இ.ஆ.பாடசாலை**



# அந்தோ! எனது பாடசாலை

1945களிலே இரண்டாவது மகா யுத்த கால முடிவிலே சாவகச்சேரி இந்துவின் ஆரம்ப பிரிவிலே சேர்ந்தோம். அச்சந்தர்ப்பத்தில் மேலே ஆகாய விமானச் சத்தம் கேட்டால் உடனே அமைக்கப்பட்டிருந்த பாரிய கிடங்கினில் ஓடி ஒழிப்போம். கண்டி றோட் கரையிலே "ப" வடிவில் அமைக்கப்பட்டிருந்த கட்டடத்திலிருந்து பாடம் கற்றோம். இப்பாடசாலையிருந்தபடியால் பக்கத்தில் சங்கத்தானை எனும் புகையிரத நிலையம் அமைக்கப்பட்டது. அக்காலத்தில் கரிக்கோச்சிகள் "சுக்கு சுக்கு கூ" என்று போகும் பொழுது எங்களுக்கு விநோதமாக அமைந்ததோடு எங்கள் பாடநேரங்களையும் கணிப்போம். மேல் வகுப்பில் படித்த அப்புக்காத்து அண்ணை "அ ஆ" என்று மணலிலே கைவிரலால் எழுதிச் சொல்லித்தருவார். அடுத்து எங்கள் காலத்தில் கதிர்காமர் அதிபராக இருந்து இளைப்பாற, சமயத்தை எடுத்து இயம்பும் குடுமியோடு திரு. சுப்பையா தலைமை வகித்து முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார். தேவார திருவாசத்தோடு ஆனைமுகம் ஆறுமுகன் என்று இயம்பி பாடசாலை ஆரம்பிக்கும். தமிழர் மரபு, சமய மரபுக்கமைய அப்பொழுது அனேகமாக நாங்கள் வேட்டியையே அணிவோம். முத்துச்சிரிப்பும் மடிப்புக் குலையாத சால்வையோடும் முத்துவேலு ஆசிரியரும் சிவந்த குறுகிய மேனியா தம்பிப்பிள்ளை, பருத்த பருமனுடைய சிவபாதம், பல்லைக்கடிக்கும் பேரம்பலம், தாமோதரம்பிள்ளை, பக்தி படைத்த உமையம்மை, உயர்ந்த சிவபாதசுந்தர இராசலட்சுமி, மீனாட்சிப்பிள்ளை ஆகிய ஆங்கில ஆசிரியர்கள் இளமையான சுப்பிரமணிய ஆசிரியர் ஆகிய பலரின் வழிகாட்டலில் அக்காலத்தில் தென்மராட்சியில் பலரும் கல்வி கற்று நற்பிரசைகளாக பலதொழில் துறையிலும் சிறந்து விளங்கினார்கள். அந்த நிலமை இன்றும் தொடர்கிறது. நாமும் அக்காலத்துப் புலமைப்பரிசில் பெறக்கூடியதாக இருந்தது.

மாணவர் தொகை அதிகரிப்பால் இடவசதியின்மையால் அவதியுற்று இப்புதிய கட்டடத்தில் குடி புகும் சந்தர்ப்பத்தில் இப்பாடசாலை வளரவேண்டும், இப்பிரதேசம் வளர வேண்டும் என வாழ்த்தி முடிக்கின்றேன்.


**டாக்டர் ச. அம்பிகைபாகன்**<br>
**அரசினர் ஆதார வைத்தியசாலை,**<br>
**சாவகச்சேரி.**



# தென்மராட்சி மண்ணின் திறன்மிகு கல்விச்சாலை

105 ஆண்டுகள் தொன்மை வாய்ந்தது தென்மராட்சியின் தேசிய சொத்தான யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி. பெருமகனார் அமரர் வி.தாமோதரம்பிள்ளையின் நல் இதயத்தில் விளைந்த நன்முத்து இக்கல்லூரி. 1904ம் ஆண்டு முதல் 21.08.1989 வரை ஒரே நிர்வாகத்தின்கீழேயே ஆரம்பப்பிரிவுகளும் மேற்பிரிவுகளும் இயங்கி வந்தன.இரண்டு பிரிவுகளினதும் நன்மை கருதி மேற்குறிப்பிட்ட திகதியிலிருந்து இவ்விரண்டும் தனித்தனியான நிர்வாகங்களைக் கொண்டு இயங்கத் தொடங்கின. இந்து ஆரம்ப பாடசாலை தரம் 1 முதல் தரம் 5 வரையான வகுப்புக்களையும் இந்துக்கல்லூரி தரம் 6 முதல் தரம் 13 வரையான வகுப்புக்களையும் தம்மகத்தே கொண்டு தத்தமது முத்திரைகளைப் பொறித்து வருகின்றன.

இந்து ஆரம்ப பாடசாலை 03.09.2009 ஆகிய இன்று புதிய காணியில், புதுப்பொலிவுடன், அழகிய கட்டடத் தொகுதியில் பிரவேசித்து, மழலைகளின் அறிவுப்பசிக்கு அருவிருந்தளிக்க இருப்பது பாராட்டுதற்குரியது.

இப்பாடசாலைக்காக 40 பரப்புக்காணியை சகாய விலையில் வழங்க முன்வந்த சங்கத்தானை சப்பச்சி மாவடி விநாயகர் ஆலய நிர்வாகத்தினருக்கும் கொள்வனவு செய்ய நிதியுதவியை வழங்கிய யா/ சாவகச்ரேி இந்துக்கல்லூரி பழைய மாணவர் ஆசிரியர் சங்க லண்டன் கிளையினருக்கும் கட்டடத்தொகுதியினை அழகுற அமைத்துத்தந்த சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தினருக்கும் (SDC) எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மிகவும் இடநெருக்கடியை எதிர்நோக்கும் இந்துக்கல்லூரியின் ஒரு பகுதி கட்டடத் தொகுதியில் 500க்கு மேற்பட்ட மாணவர்களை உள்வாங்கி தனது கற்றற் செயற்பாடுகளை எவ்வளவோ இடர்களுக்கு மத்தியில் நடாத்தி வந்த எமது பாடசாலை இன்று பல்வகை வசதிகளுடனமைந்த பாடசாலை வளாகத்துள் கால்பதிக்கின்றது. எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட தற்காலிக வகுப்பறைத் தொகுதிகள் மற்றும் முன்பக்க பாதுகாப்புச் சுவர்கள் என்பன மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு மேலும் ஓர் உந்து சக்தியாக விளங்குவது கண்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆரம்ப பிரிவு மாணவர்களின் அடிப்படைக்கல்வியை அள்ளி வழங்கி வரும் இக்கல்விச்சாலை தென்மராட்சியின் முதன்மை ஸ்தானத்திற்குரியது என்பது பெருமைக்குரியது. எதிர்காலத்தில் இப்பாடசாலையின் கல்வி சார் வெளியீடுகள் பாராட்டுக்குரியனவாக அமையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எதிர்காலத்தில் எழிலான சிற்பிகளை உருவாக்கி எத்திசையும் புகழ் மணக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

திரு.அ.ரமணிதரன்
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்
(2009-2010)
யா/சாவகச்சேரி இ.ஆ.பாடசாலை



# MESSAGE FROM
## MR.SARA THAMOTHARAM...

I take great pleasure in sending this brief message of good wishes on the occasion of declaring open the new building which symbolizes a new accelerated phase in the history of Chavakachcheri Hindu Primary School.

Though this school had its beginning as the primary section of Chavakachcheri Hindu College, from 21.08.1989 it has been Functioning separately as one of the leading primary schools in Jaffna district.

In spite of the limited availability of physical resources, because of the efficiency and effort of the principal, teaching staff, other employees and benefactors this institution has been able to produce good results in academic and co-curricular activities.

However, the school faced a great difficulty in securing physical needs in the near past. When the school faced the challenge of fulfilling the physical needs of the students, the Swiss Development Corporation extended its helping hand and now we have this beautiful new building with all the modern facitlities. I take this opprotunity to thank the SDC on behalf of my family that stood with the school for three generations.

I sincerely hope that the parents, educationists, and persons of all walks of life, government and non government organizations will always help this school in future. I earnestly request all the students to make use of all the opportunities to develop themselves in order to be the torch bearers of a bright and brave and brilliant society which will widen our horizone.

**Sara Thamotharam**
**Thamotharampillai Road,**
**Chavakachcheri.**

# யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி
# கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினரின்
# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணத்துக் கல்விப் பாரம்பரியத்திலே அதுவும் குறிப்பாகத் தென்மராட்சியின் கல்விப் பாரம்பரியத்திலே சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்குத் தனியிடம் உண்டென்பது மறுக்கவொண்ணா உண்மையாகும். இன்று தேசியப் பாடசாலையாக நூற்றாண்டுகளையும் கடந்து கல்விப் பணியாற்றிவரும் இக்கல்லூரியின் மைற்கற்கள் பலவாகும். கல்லூரியின் வளர்ச்சிப் போக்கிலே மாணவர் தொகைப் பெருக்கம் காரணமாகவும், நிர்வாகக் கடமைகளை இலகுபடுத்துமுகமாகவும் சாவகச்சேரி இந்து கல்லூரியிலிருந்து 1989 ஆம் ஆண்டு சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை ஒரு தனி நிறுவனமாக உருவாக்கப்பட்டது.


சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை ஒரு தனி நிறுவனமாக உருவெடுத்ததேயல்லாமல், தென்மராட்சிக் கல்வி சமூகத்தினால் அது சாவகச்சேரி இந்து கல்லூரியின் ஆரம்பப் பிரிவாகவே இன்றும் கருதப்படுகின்றது. நேற்றுவரை பல்வேறு அடிப்படை வசதிக் குறைபாடுகளுடன் இப்பாடசாலை தனது கல்விப் பணியைச் செவ்வனே நிறைவேற்றி வந்தது. இன்று இப்பாடசாலை, சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர்களின் ஒத்தாசையுடன் – குறிப்பாக எமது பழைய மாணவர் சங்க இலண்டன் கிளையின் ஒரு மில்லியன் ரூபா உதவியோடு புதிய காணி பெறப்பட்டு, சுவிற்சர்லாந்து நாட்டுத் தொண்டு நிறுவனமொன்றின் உதவியோடு, வடக்கிலேயே வேறெங்கும் காணமுடியாத வசதிகளும் அழகும் கொண்ட புதிய கட்டடத்தொகுதி அமைக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா இன்று, 2009.09.03 ஆம் திகதி நடைபெறுவதனையிட்டு நாமெல்லாம் இறும்பூதடைகின்றோம்.

புதிய கட்டடத்திலே காலடி வைக்கும் இந்து ஆரம்பப் பாடசாலை மேலும் சிறந்த கல்விப்பணியாற்ற எல்லாம் வல்ல இறைவன் துணைநிற்பானாக! அதிபர், ஆசிரியர்கள் புதிய கட்டடத்திலே புதிய உத்வேகத்துடனும் அர்ப்பண சிந்தையுடனும் சேவை புரிய வேண்டும் – புரிவார்கள். புதிய பாடசாலையிலே காலடி வைக்கும் எமது இளஞ்சிறார்கள் கல்வியில் மேலும் அக்கறை செலுத்தி, உயர் நிலையை அடைய வாழ்த்துகின்றோம். இறுதியாக இப்பாடசாலையிலே அன்றும் – இன்றும் – இனியென்றும் கல்விப் பணி செய்த செய்கின்ற செய்யப்போகின்ற அனைத்து நல்லுள்ளங்களுக்கும் இறையாசி கிடைப்பதாக!

நலமே நாடுக! நலமே புரிக! நலமே ஒளிர்க!

கொழும்பு வாழ் பழைய மாணவர்கள் சார்பாக,
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
கொழும்புக் கிளை.

# OUR PRINCIPAL



## MRS.S.KANDASAMY

SLTS-1

# அதிபரின் வாழ்த்துச்செய்தி

கண்ணெனக் காக்கப்படும் எண்ணையும் எழுத்தையும் புகட்டும் எமது பாடசாலை புதிய கட்டடத்தை நோக்கி நகர்வதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தென்மராட்சி கல்வி வலயத்தில் தவிர்க்கமுடியாத இடத்தை எமது ஆரம்பப் பாடசாலை வகித்த போதிலும் கடந்த இரு தசாப்தகாலமாக போதிய இடவசதியின்றி பெரும் சிரமங்களுக்கு மத்தியிலேயே இயங்கி வந்தது. இந்நிலையில் எமது பாடசாலைக்கு ஒரு புதிய கட்டடம் அவசியம் என்ற காலத்தின் தேவையை உணர்ந்து நகரிற்கு அண்மித்தும் கல்விக்கேற்ற அமைதியான சூழலிலும் போதிய பரப்பளவுடன் கூடிய ஒரு காணியை கொள்வனவு செய்வதற்குரிய பண உதவி தந்தமைக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் ஆசிரியர் சங்கம் ஐக்கிய இராட்சியத்தினருக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம். ஆலயம் பதினாயிரம் அமைத்தலிலும் மேலான பணியாக எழுத்தறிவித்தல் கருதப்படுகிறது. அம்மேலான பணியை முன்னெடுக்க நேர்த்தியான, நவீன வசதிகளுடன் கூடிய, யாழ் மாவட்ட ஆரம்பப் பாடசாலை அனைத்திற்குமே ஓர் எடுத்துக்காட்டான இவ்வழகிய கட்டடத்தை அமைத்து தந்துதவிய சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான (SDC) அமைப்பினருக்கு எமது பாடசாலை சமூகம் சார்பாக நன்றி தெரிவிக்கின்றேன்.

அத்துடன் சுவிஸ் அரச நிறுவனத்தின் முன்னாள் பொறுப்பாளர் திரு Rudolf Fanhauser அவர்களையும் இன்று இக்கட்டட வேலைகள் துரிதமாகவும் சிறப்பாகவும் நிறைவடைய பாடுபட்ட திரு Hans Petter Etter Head of Field Office - SDC அவர்களையும் அந்நிறுவனத்தின் பொறியியலாளர்களான செல்வி ரி.தர்சனா, திரு.இ.சிறீகாந்தா அவர்களையும் அந்நிறுவனத்தின் ஏனைய அலுவலர்களையும் இவ்வேளையில் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

மேலும் இக்கட்டடங்கள் அமைவதற்கான ஆரம்ப வேலைகளில் அக்கறையுடன் ஈடுபட்ட தென்மராட்சி வலய முன்னாள் கல்விப் பணிப்பாளர்களான திரு.வ.செல்வராசா திருமதி.அ.வேதநாயகம் அவர்களுக்கும் இந்நாள் கல்விப் பணிப்பாளர் திரு.கு.பிறேமகாந்தன் அவர்களுக்கும் வலயக்கல்வி அலுவலகத்தின் ஏனைய உத்தியோகதர்களுக்கும் நான் நன்றி கூறி வாழ்த்துவதற்குக் கடமைப்பட்டுள்ளேன்.

அத்துடன் கட்டடப்பணி வேலைகளை இரவு பகலாக மேற்பார்வையிட்டு நல்வழிப்படுத்திய தொழில்நுட்ப உத்தியோகத்தர்களான திரு.செல்வராசா

பயிலுனர்களாக திறம்பட பணியாற்றிய திரு.க.ரமேஸ், திரு.சு.சதீஸ் ஆகியோரும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

மேலும் இவ்வாறான பரந்த காணியில் அழகிய கட்டடங்களில் எமது பிள்ளைகள் சுதந்திரமாகப் பல்வேறு செயற்பாடுகளையும் புரிய வேண்டும் என்ற நோக்குடன் செயற்பட்டு, இக்கட்டட அத்திவாரம் இடல் செயற்பாடுகள் வரை ஓயாது செயற்பட்ட எமது பாடசாலையின் அதிபர் திரு.வ.கயிலேஸ்வரன் அவர்களை எமது பாடசாலைச் சமூகம் என்றென்றும் நன்றியுடன் நினைக்கின்றது.

மேலும், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இக்கட்டட வேலைகளின் புதிய ஒப்பந்தகாரர்களாகப் பொறுப்பேற்று மிகச் சிறந்த முறையில் கட்டடப்பணிகளை ஒப்பேற்றிய Ruhlins நிறுவனத்தினரும் நன்றிக்குரியவர்களே.

சீரிய கட்டடப்பணிகள் செவ்வனே நிறைவுற அல்லும் பகலும் அயராது உழைத்த பாடசாலை வேலைகள் பகுதி பொறியியலாளர் திரு.கு.சிவபாலன் அவர்களுக்கும் அவரது தொழில்நுட்ப உத்தியோகத்தர்களான திரு.இ.பாலகிருஸ்ணன் திரு.வே.பாராளன் அவர்களுக்கும் பாடசாலை வேலைப் பகுதியின் ஏனைய அலுவலர்களுக்கும் நன்றி கூறுவதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

கட்டடம் கவின்பெற அமையவும், ஆக்கப் பணிகள் உயர்வு பெறவும் அன்றில் இருந்து இன்று வரை பல்லாற்றாலும் தோள் கொடுத்து நிற்கும் பெற்றோர்களும் நலன்விரும்பிகளும் என்றும் நன்றிக்குரியவர்கள் பாராட்டப்படவேண்டியவர்களே.

தேவை ஏற்படும் போது நேசக்கரம் நீட்டும் இந்து தாய் சமூகத்தினரும் பாராட்டி நன்றி கூறப்பட வேண்டியவர்களே!

எனது முன்னெடுப்புப் பணிகளுக்கு என்றும் துணை நிற்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பிரதி அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவரும் வாழ்த்தப்பட வேண்டியவர்களே!

இறுதியாக புனிதப் பணியாம் கல்விப் பணியை புதிய கட்டடத்தில் தொடர இருக்கும் ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் எல்லாம் வல்ல விநாயகனின் பாதம் பணிந்து ஆசி கூறுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**திருமதி.சி.கந்தசாமி**
**அதிபர்**
**யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை**

# OUR PRINCIPAL EMERITUS



MR. VALLIPURAM. KAILESWARAN (SLPS-1)
(21.08.1989 - 20.02.2007)

# OUR DEPUTY PRINCIPAL



**MRS.S.THIRUCHCHELVAM**

**SLTS-1**

# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்பதற்கிணங்க ஒரு மனிதனது வாழ்க்கையில் ஆரம்ப பிரிவுக்கல்வி மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றது. சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலிருந்து 1989.08.21 அன்று பிரிந்து, இந்து ஆரம்ப பாடசாலையாக இயங்கத் தொடங்கி, இருபது ஆண்டுகளை நிறைவு செய்த பின்னர் ஒரு விடிவெள்ளியாக புதிய கட்டடத் தொகுதியின் திறப்பு விழாவை ஆரம்ப பிரிவுச் சமூகம் காண்கின்றது. இருபது ஆண்டுகளாக ஆசிரியச் சமூகம் கற்பித்தலில் எதிர்நோக்கிய சிரமங்களும் மாணவச் சமூகம் கற்றலில் எதிர்நோக்கிய சிரமங்களும் எழுத்திலோ சொல்லிலோ வடிக்க முடியாதவை.இத்துணை சிரமங்களுக்கும் மூலகாரணமாக விளங்கியது இடப்பற்றாக்குறையே தான். எனினும் எத்தகைய இடர்களுக்கும் முகம் கொடுத்து எதிலுமே சளைக்காது நல்ல பெறுபேறுகளைப் பெற்றமை பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

எமது இப்பிரச்சனையை ஏற்று பாடசாலையை இடமாற்றுவதற்கு நிதியுதவி வழங்கிய சாவ.இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க இலண்டன் கிளையினருக்கும் புதிய கட்டடத் தொகுதியை விரைவில் அமைத்து பூர்த்தி செய்து கையளித்த சுவிற்சலாந்து அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினருக்கும் பாடசாலைச் சமூகத்தினர் என்றென்றும் நன்றி கூறக் கடமைப்பட்டவர்களாவர்.

இன்று எம் சிறார்கள் மகிழ்ச்சிகரமான கற்றலுக்காக புதியதொரு சூழலில் காலடியெடுத்து வைக்கின்றார்கள். எமது பாடசாலை யாழ் குடா நாட்டிலேயே சிறந்ததொரு முன்னோடியான ஆரம்ப பாடசாலையாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. எல்லாம் வல்ல இறை ஆசியுடன், திக்கெட்டும் புகழ் பரப்பி, நீண்ட காலம் வளமுடன் வியாபித்து, மாணவர்கட்கு நிழல் பரப்பும் விருட்சமாக வளர எனது நல் வாழ்த்துக்கள்.

திருமதி.சி.திருச்செல்வம்
பிரதி அதிபர்
யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை

# யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் வரலாற்றுக் குறிப்புக்கள்

| | |
|---|---|
| 1904 | சாவகச்சேரிச் சந்தைக்கண்மையில் ஒரு சைவத் தமிழ்க்கலவன் பாடசாலை திரு.வி.தாமோதரம்பிள்ளை அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. |
| 1905 | அது சங்கத்தானைக்கு மாற்றப்பட்டு முதற்தலைமையாசிரியராக திரு.கே.எஸ்.கந்தசாமி பொறுப்பேற்றார். |
| 1907 | துவிபாஷா பாடசாலையாக்கப்பட்டது |
| 1907 | 1910 வரை அரசின் நன்கொடையின்றி இருந்த காலமாகும். |
| 1908 | தமிழ்ப்பாடசாலை சங்கத்தானை கந்தசுவாமி கோயிலின் பின்வீதிக்குக் கொண்டு செல்லப்பட்டது. |
| 1926 | கோயிலடித் தமிழ்ப்பாடசாலை இங்கு கொண்டு வரப்பட்டது. முகாமை திரு.வி.தாமோதரம்பிள்ளை அவர்கள். |
| 1940 | C பிரிவுக் கல்லூரியாக்கப்பட்டு S.S.C வகுப்பு ஆரம்பமாகியது. |
| 1945 | B பிரிவுக் கல்லூரியாக்கப்பட்டு S.S.C வகுப்பிற்கு விஞ்ஞானக்கல்வி போதிக்கப்பட்டது. |
| 1949 | A பிரிவுக்கல்லூரியாக்கப்பட்டு H.S.C வகுப்பு ஆரம்பமாகியது. |
| 1957 | பழைய மாணவர் சங்கம் அமைக்கப்பட்டு தமிழ்ப்பாடசாலை ஆங்கிலப்பாடசாலையிடம் ஒப்படைக்கப்பட்டது. |
| 1962 | (1962.06.15) அரசாங்கம் பொறுப்பேற்றது |
| 1979 | தேர்தற் தொகுதிக்கு ஒன்று எனும் அரசின் புதிய கொள்கைக்கு அமைய மத்திய மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டது. |

# J/CHAVAKACHCHERI HINDU PRIMARY SCHOOL
## STAFF - 2009



Seated L-R : Mr.K.Thavayogarajah, Mrs.S.Sivabalasegaram, Miss.S.Sakunthala, Mrs.Y.Panchadcharam, Mrs.K.Srimurugathas, Mrs.V.Paramanathan, Mrs.S.Kandasamy(Principal), Mrs.S.Thiruchelvam(Dep.Principal), Miss.R.Sivagowry, Mrs.G.Kanagaraja, Mr.S.Nanthakumar, Mr.Y.Lingeswaran.

Stand L-R : Mrs.S.Anchalan, Miss.S.Gayaththiri, Mrs.S.Sivananthan, Mrs.V.Mohalingam, Mrs.S.Srirankanathan, Mrs.R.Baskaran, Mrs.S.Saththiyanandan, Mrs.T.Suthakaran, Mrs.R.Suntharalingam, Mrs.N.Nanthakumaran, Mrs.S.Kananathan.

| | |
|---|---|
| 1989 | 1989.08.21 இல் இருந்து ஆரம்ப பாடசாலை ''இந்து ஆரம்ப பாடசாலை'' என்ற பெயருடன் தனித்து இயங்கத் தொடங்கியது. 14 ஆசிரியர்களுடன் 837 மாணவர்களுடனும் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையின் முதல் அதிபராக திரு.வ.கயிலேஸ்வரன் அவர்கள் பொறுப்பேற்றார். திரு.V.S. சரவணமுத்து அவர்கள் உபஅதிபராக பணியேற்றார். |
| 24.08.1990 | திரு.V.S. சரவணமுத்து அவர்கள் அமரத்துவம் அடைந்ததைத் தொடர்ந்து திருமதி.ப.பரமசாமி அவர்கள் உபஅதிபராகக் கடமையேற்றார். |
| 31.01.1995 | திருமதி.ப.பரமசாமி அவர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெற்றதையடுத்து திருமதி.சி.கந்தசாமி அவர்கள் உபஅதிபராகப் பொறுப்பேற்றார். |
| 01.02.1997 | யா/கெருடாவில் சரஸ்வதி வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் இப்பாடசாலையுடன் தற்காலிகமாக இணைக்கப்பட்டனர். |
| 10.05.2000 | தென்மராட்சி மக்கள் இடப்பெயர்வு காரணமாக எமது பாடசாலை வடமராட்சியில் மாலுசந்தியில் அமைந்துள்ள சதாபொன்ஸ் தனியார் கல்வி நிலையத்தில் நிர்வாகி திரு.S.சுந்தரலிங்கம் அவர்களின் அனுசரணையுடன் இயங்கத் தொடங்கியது. |
| 01.03.2002 | மீண்டும் எமது பாடசாலை சாவகச்சேரியில் இயங்கத் தொடங்கியது. |
| 19.02.2004 | தாமோதரம்பிள்ளை வீதியில் அமைந்துள்ள சப்பச்சி மாவடி விநாயகர் ஆலயத்திற்குச் சொந்தமான 40 பரப்புக்காணி தர்மகர்த்தா திரு.சரா தாமோதரம்பிள்ளை அவர்களிடமிருந்து யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க லண்டன் கிளையினரின் நிதியுதவியுடன் கொள்வனவு செய்யப்பட்டது. |

16.03.2006 புதிய பாடசாலைக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுதல் வைபவரீதியாக சுவிஸ் நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்டது.

11.08.2006 இராணுவ நடவடிக்கை மீளவும் ஆரம்பிக்கப்பட்டதனால் கட்டட வேலைகள் தொடர்ந்து செய்ய முடியாது இடைநிறுத்தப்பட்டது.

20.02.2007 அதிபர் திரு.வ.கயிலேஸ்வரன் அவர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். உப அதிபர் திருமதி.சி.கந்தசாமி அவர்கள் அதிபராகவும் திருமதி.ச.திருச்செல்வம் உப அதிபராகவும் கடமைகளைப் பொறுப்பேற்றனர்.

01.11.2008 S.D.C நிறுவனத்தினரால் கட்டட வேலைகள் மீளவும் துரித கதியில் ஆரம்பிக்கப்பட்டது.

07.01.2009 தாமோதரம்பிள்ளை வீதியிலுள்ள காணியில் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதியுதவிடன் தற்காலிக வகுப்பறை அமைக்கப்பட்டு தரம் 1 வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது.

03.09.2009 பாடசாலைக்கான புதிய கட்டடத் தொகுதி திறப்பு விழா

# J/Chavakachcheri Hindu Primary School
## A Brief Survey

1904 - This was founded as a Saiva Tamil Mixed School by Late Mr.V.Thamotharampillai, near the market at Chavakachcheri.

1905 - The School was shifted to Sangathanai and Late Mr.K.S.Kandasamy was the Principal

1907 - It was made a bilingual school.

1908 - The Tamil section of the school functioned behind the Kandasamy Kovil at Sangaththanai

1926 - The Tamil Section was brought to the place where CHC functions now. Late Mr.V.Thamotharampillai was the manager.

1940 - School was uplifted to "C" grade. S.S.C. classes were estabilshed.

1945 - School was uplifted to "B" grade. Science was started in the SSC classes.

1949 - School was uplifted to "A" grade. H.S.C classes were started.


1962 - The School was taken over by the government on 13.06.1962

1979 - The School was uplifted to the status of a Madhya Maha Vidyalayam

1989 - The School started functioning as a separate school from CHC, with effect from 1989.08.21. It was named as "Chavakachcheri Hindu Primary School" The School had 14 teachers and 837 students at that time. Mr.V.Kaileswaran was the first Principal of this School. Late Mr.V.S.Saravanamuthu was the vice Principal of the School.

| | |
|---|---|
| 24.08.1990 | Mr.V.S.Saravanamuthu expired and Mrs.P.Paramasamy was appointed as the vice Principal of the School |
| 31.01.1995 | Mrs.P.Pramasamy retired from service and Mrs.S.Kandasamy was appointed as the vice Principal of the School. |
| 01.02.1997 | Students and Teachers of J/Kerudavil Saraswathy Vidyalaya were temporarily attached to this School |
| 10.05.2000 | The School started functioning at Sathafons Institute in Vadamaradchy due to the displacement from Thenmaradchy Mr.S.Sundaralingam Director of the institute was of much help for us here. |
| 01.03.2000 | Re - settled at chavakachcheri |
| 19.02.2004 | Purchased 40 larchams of land from the Trustees of Chappachchy Mavadi Pillaiyar Temple Mr.Sara Thamotharampillai played an important role in this transaction. The land was purchased from the fund donated by OSTA OF CHC in UK. |
| 16.03.2006 | Foundation stone was laid by the SDC (Swiss Agency for Development & cooperation) for the new building complex. |
| 11.08.2006 | : Building work stopped because military actions had started again. |
| 20.02.2007 | : Mr.V.Kaileswaran retired from service. Mrs.S.Kandasamy and Mrs.S.Thiruchchelvam took the responsibilities of the Principal and the vice Principal respectively. |
| 01.11.2008 | : The SDC Started construction work once again at a rapid rate. |
| 07.01.2009 | : Grade 1 of CHPS started functioning under Temporary sheds in this premise. The SDS of the school funded this. |
| 03.09.2009 | : The ceremonial opening of the new building complex at Thamotharampillai Road, Sangathanai. |

# FOUNDATION STONE LAYING CEREMONY
# 13-06-2006








# EVALUATING THE PROGRESS OF THE PROJECT BY SDC - 2009.06.26






# MAHOGANY BEING PLANTED IN THE COURTYARD - 2009.06.26







# யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை புதிய கட்டடப் பரிணாமம்

திரு.கு.சிவபாலன்
பாடசாலை வேலைகள் பொறியியலாளர்
மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை
யாழ்ப்பாணம்

இந்து ஆரம்ப பாடசாலை பலரது அயராத முயற்சிகளின் பலனாக புதியதோர் இடத்திற்கு அடி எடுத்து வைப்பதில் பங்கெடுப்பதிலும் வாழ்த்துவதிலும் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்து ஆரம்ப பாடசாலை ஆரம்பித்து பலதசாப்தங்களை கடந்து பல ஆயிரக்கணக்கான பழைய மாணவர்களையும் ஆசிரியர்களையும் இணைத்து வளவாளர்களாக மாற்றியுள்ளது. ஆரம்ப பாடசாலையில் கல்வி பயின்றவர்களில் அனேகர் இந்துக்கல்லூரி மாணவர்களாகவும் இருந்தபடியினால், அவர்களது முயற்சியின் பயனாக நாற்பது பரப்பு காணி பாடசாலைக்கு கொள்வனவு செய்யப்பட்டதன் பயனாக இன்று பாடசாலை புதுப்பொலிவுடனும் பாடசாலைக்குத் தேவையான வசதிகளுடனும் திறந்து வைக்கப்படுகின்றது. இப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களும் கற்பிக்கும் ஆசிரியர்களும் இதனால் நல்ல சூழ்நிலையில் கற்றல், விளையாட்டு, மனிதநேய பழக்க வழக்கங்களை மேம்படுத்திக் கொள்வதில் ஏனைய பாடசாலைகளிலும் பார்க்க சிறந்த தளத்தை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை தெரிவிப்பதில் பெருமிதம் அடைகின்றேன்.

பழைய பாடசாலையில் மாணவர்கள் கல்வியில் மிகுந்த திறமைகளை காட்டியமையும் ஆசிரியர்களின் அயராத உழைப்பும் பாடசாலையின் வளர்ச்சியை ஊக்குவித்தது. ஆனாலும் பாடசாலை அமைந்த இடம் மேலதிக கட்டடங்களை அமைப்பதற்கோ சுகாதார வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதற்கோ ஏதுவாக அமையவில்லை. பழைய அதிபர்கள் மிகவும் கஸ்டமான சூழ்நிலையில் மாணவர்களை உள்வாங்கி கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை சரிவர செய்ய முயற்சி எடுத்தனர். கல்வி அதிகாரிகளினாலும் ஒன்றும் சீர் செய்ய முடியவில்லை.

சுவிஸ் அரசாங்க நிறுவனம் யாழ் மாவட்டத்திற்கு வருகை தந்து பல பாடசாலைகளை பொறுப்பெடுத்து பல கட்டடங்களை சாவகச்சேரியில் அமைத்துக் கொடுத்தது. அப்பொழுது இருந்த திரு Rudolf fankhauser (ரூடி என்று செல்லமாக அழைக்கப்படுவர்) அவர்களும் கட்டட கலை நிபுணராக இருந்த Petersmith அவர்களும் பாடசாலையை தரிசித்து பாடசாலையின் நிலையை அறிந்து கட்டாயம் இப்பாடசாலைக்கு வசதிகள் செய்யப்பட வேண்டும் என்று ஆர்வம் காட்டினர். அவர்களது ஆர்வத்தினாலும் அப்பொழுது அதிபராக இருந்த திரு.வ.கயிலேஸ்வரன் அவர்களின் முயற்சியினாலும் சாவகச்சேரி இந்து பழைய மாணவர் ஆசிரியர் சங்க ஐக்கிய இராச்சியத்தினரின் ஒத்துழைப்பில் காணி வாங்கப்பட்டது.

அதன்பின் Petersmith அவர்கள் எனது ஆலோசனைகளையும் கருத்தில் எடுத்து கட்டட அமைப்புக்களை வடிவமைத்து தந்தார். அதன்பின் அதிபர் தலைமையில் அத்திவாரக்கல் நாட்டும் விழாவும் சிறப்பாக நடைபெற்றது. பின்பு நாட்டில் ஏற்பட்ட குழப்ப நிலைகளால் வேலைகள் நிறுத்தப்பட்டு திட்டங்கள் பின்நகர்த்தப்பட்டன. அதன்பின் திரு. Bead Klein அவர்கள் கட்டட அமைப்பில் சில மாற்றங்களை ஏற்படுத்தி இருந்தார். அதன்பின் கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு Ranjan கட்டட (Mr.V.Kanapathippillai) ஒப்பந்தகாரர் பொறுப்பெடுத்து அத்திவாரங்களை கட்டி முடித்தார். ஆயினும் ஏ 9 வீதி தடைப்பட்டதால் திட்டம் இடைநிறுத்தப்பட்டது. பின் Esther Portmann அம்மையார் அவர்கள் பொறுப்பேற்றபின் வேலைகளைத் தொடங்குவதற்கான ஆயத்தங்களை ஏற்படுத்தி தந்தார். அவரை தொடர்ந்து Mr.Hugo Gisler தலைமையில் பொறியியலாளர் செல்வி ரி.தர்சனாவின் மேற்பார்வையில் திட்டம் Ruhlins நிறுவனத்திற்கு 46மில்லியன் பெறுமதியில் கொடுக்கப்பட்டு இன்று பூரணமாக பொலிவு பெற்றுள்ளது. இறுதி கட்ட வேலைகளுக்கு திரு Hans peter Etter அவர்கள் (Head of field) பொறுப்பேற்று திட்டம் மிக விரைவாகவும் சிறப்பாகவும் தரமாகவும் அமைய தமது முழுப்பார்வையையும் செலுத்தி பாடசாலைக்கட்டடம் சிறப்பாக அமைய பாடுபட்டுள்ளார். அவர் காட்டிய அக்கறை எம்மையே மெய்சிலிர்க்க வைத்துள்ளது.

அவர் நாங்கள் கவனத்தில் எடுக்காத விடயங்களை கூறி திட்டம் நல்லமுறையில் செய்து முடிக்கப்பட்ட வேண்டும் என்பதில் மிகவும் திட்டவட்டமாக செயற்பட்டார். பாடசாலையின் பராமரிப்பில் மிகுந்த கவனமும் தூரநோக்கும் கொண்டு செயற்பட்டு சில மேலதிக வேலைகளை செய்வதற்கேற்ற நடவடிக்கைகளை எடுத்து வெற்றியும் கண்டுள்ளார். அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

மற்றும் இத்திட்டத்தில் பங்காற்றிய SDC நிறுவன பொறியியலாளர்களான திரு.குகானந்தன், செல்வி.ரி.தர்சனா, திரு.பரணிதரன், திரு.இ.சிறிகாந்தா அவர்களும் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களும் நினைவு கூறப்பட வேண்டியவர்கள். பொறியியலாளர் திரு.சிறிகாந்தா அவர்கள் தனது அனுபவத்தை நன்கு எம்முடன் பகிர்ந்து கட்டடம் சிறப்பாக அமைவதில் மிகவும் ஊன்று கோலாக இருந்துள்ளார். அடுத்ததாக பாடசாலைக் கட்டட உத்தியோகத்தர்களாக செயற்பட்ட திரு.இ.பாலகிருஸ்ணன் திரு.வே.பாராளன், திரு.கு.செல்வராசா, திரு.ரமேஸ், திரு.சு.சதீஸ் ஆகியோர் முழுநேரமும் மேற்பார்வை செய்து திறமையாக கட்டடம் அமைய நேரம் காலம் பாராது ஒத்துழைத்துள்ளனர். அத்தோடு எனது வேலைப்பகுதியில் லிகிதர்களாக கடமையாற்றும் திருமதி.தி.யேசுமரியதாசன் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களும் கட்டடம் அமைய உதவியுள்ளனர். செல்வி.பு.தனுசா அவர்கள் தேவையான வரைபடங்களை வரைந்து உதவியுள்ளார்.

அடுத்ததாக பாடசாலையின் அதிபர் திருமதி.சி.கந்தசாமி, அவர்தம் ஆசிரியர்கள் மிகவும் அக்கறையோடு இத்திட்டத்தில் பங்குபற்றி நம்மோடு கூட்டங்களில் கலந்து கொண்டு தேவைகளை இனங்கண்டு வழங்கிய ஆலோசனையின் பெயரில் இத்திட்டங்களில் சில மாற்றங்களை புகுத்தி சிறப்பாக அமைய ஒத்துழைப்பு நல்கியுள்ளனர். அத்துடன் முதலாம் ஆண்டு வகுப்பறை அமைப்பதிலும் மதில் வாசல் கதவு அமைப்பதிலும் பெற்றோர், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் பங்களிப்பை சிறப்பாக வழங்கி செயற்படுத்தி பாடசாலையின் முகப்பு தோற்றம் சிறப்பாக அமைய ஒத்துழைப்பு நல்கியுள்ளனர். முக்கியமாக இவ்வேலைத்திட்டத்தை விரைவுபடுத்த காலம் நேரம்பாராது உழைத்த அதிபர் அவர்களுக்கு எனது வாழ்த்துக்களும் நன்றிகளும் உரித்தாகுக.

இறுதியாக இக்கட்டடத்தை பொறுப்பேற்று குறுகிய காலத்தினுள் கட்டி முடித்து எமக்கு கையளித்துள்ள திரு.உருத்திரலிங்கம் (கட்டட ஒப்பந்தகாரர்) அவர்களுக்கும் அவருடன் பணியாற்றிய திரு.செந்தில்நாதன், திரு.மதன் ஆகியோருக்கும் சிறப்பாக தொழில் ஆற்றிய மின்சார வேலைகள், கூரைவேலை, கதவுநிலைகள், கண்ணாடி யன்னல்கள், இரும்பு வேலைகள் செய்த தொழிலாளர்களுக்கும் மலசலகூட வேலைகளுக்கும் நூலகத்திற்கும் தள ஓடுகள் பதித்து குழாய் விநியோக வேலைகளை செய்த தொழிலாளர்களுக்கும் எமது வாழ்த்துக்களுக்கும் நன்றியும் உரித்தாகுக.

பாடசாலை வளவினை துப்பரவாகவும் பூங்கன்றுகள் நாட்டியும் அழகுபடுத்திய ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்களுக்கும் நலன் விரும்பிகளுக்கும் எமது வாழ்த்துக்கள் உரித்தாகுக. அடுத்ததாக எல்லாம் சிறப்பாக நடத்த ஒத்துழைப்பு நல்கிய வலயக்கல்விப்பணிப்பாளருக்கும் அவருடன் சேர்ந்து பணியாற்றும் உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புக்கும், பாடசாலைக்கு வருகை தந்து தேவையான ஒதுக்கீடுகளை அவ்வப்போது ஒதுக்கி உதவிய வலயக்கல்விப்பணிப்பாளர்களுக்கும் வாழ்த்துக்கள் உரித்தாகுக. இறுதியாக இப்பாடசாலையில் கல்வி பயலும் பயிலப்போகின்ற மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வாழ்த்துக்கள் நிறைவாக இளமையிற்கல்வி சிலையில் எழுத்து என்ற வாக்கிற்கிணங்க ஆரம்பக்கல்வியை சிறப்பாக புகட்டும் இப்பாடசாலை பலநூறு ஆண்டுகளை கடந்து சேவையாற்ற இறைனை அருளாசி வேண்டும் என்பது எனது அவா.

- ஒரு நல்ல தாய் நூறு ஆசிரியர்களுக்கு நிகராவாள் – கொர்பர்ட்
- ஏழைகளின் செல்வங்கள் எவை? குழந்தைகளே
  குழந்தைகள் மட்டும் – இந்தி
- உலகில் இருவர் தான் உண்மை பேசுகிறார்கள்
  அவர்கள் குழந்தை – குடிகாரன் – டென்
- ஒரு நிமிடப் பொறுமை பத்து ஆண்டுகளுக்கு நன்மை தரும் – டென்
- குழந்தை ஏன்? என்று கேட்பது தான் தத்துவஞானத்தின் திறவுகோல் – இத்தரி
- அழகு மௌனமாயிருந்து பேசும்
  இருண்ட வீட்டின் ஒளி குழந்தை – ஜெர்மனியர்
- ஆயுளின் பெருமை ஆண்டுகளில் இல்லை – அவன்
  வாழும் முறையில் தான் இருக்கின்றது. – திருமூலர்
- குழந்தையும் மலரும் செழிப்புள்ளவை
  அவற்றை மென்மையாகக் கையாள வேண்டும் – நேரு
- உலகத்திலே மிக உயர்ந்த பொருள் காலம் தான் – சத்தியசாயி பாபா
- அமைதியான இல்லம் புனிதமான கோயில்

# OUR CHILDREN





# GRADE - 1 STUDENTS

# OUR CHILDREN





# GRADE - 2 STUDENTS

# OUR CHILDREN





# GRADE - 3 STUDENTS

# OUR CHILDREN





# GRADE - 4 STUDENTS

# OUR CHILDREN





# GRADE - 5 STUDENTS

# SCHOOL DEVELOPMENT SOCIETY COMMITTEE MEMBERS - 2009



Seated L-R : Mr.K.Thavayogarajah, Mrs.V.Paramanathan, Mrs.P.Vaiththilingam, Mr.Y.Jeyakkumar, Mrs.S.Kandasamy(President), Mr.A.Ramaneetharan(Secretary), Mrs.S.Thiruchchelvam, Miss.S.Sakunthala(Treasurer), Mr.A.Thankavelu.


Stand L-R : Mr.S.Kamalaruban, Mr.K.Kamalanathan, Mrs.T.Surendran, Miss.S.Gayaththiri, Mrs.S.Sivabalasegaram, Mr.K.Raveendra, Mr.S.Nanthakumar, Mr.K.Sathiyanandan, Mr.S.Thanaraj, Mr.Y.Lingeswaran.

# J/Chavakachcheri Hindu Primary School
# Grade 5 SCHOLARSHIP EXAMINATION RESULTS
# (1999-2008)


| Year | No.Sat | Qualified | Qualified Percentage |
|---|---|---|---|
| 1999 | 118 | 31 | 26% |
| 2000 | 109 | 23 | 21% |
| 2001 | 79 | 18 | 22% |
| 2002 | 88 | 19 | 22% |
| 2003 | 127 | 28 | 22% |
| 2004 | 131 | 31 | 24% |
| 2005 | 128 | 26 | 20% |
| 2006 | 100 | 34 | 34% |
| 2007 | 114 | 30 | 26% |
| 2008 | 101 | 31 | 31% |

# OUR NEW SCHOOL COMPLEX

## GROUND FLOOR PLAN



# UPPER FLOOR PLAN



# J/Chavakachcheri Hindu Primary School

## Staff 2009

| | | |
|---|---|---|
| Mrs. S. Kandasamy | Principal | S.L.T.S.I |
| Mrs.S.Thiruchelvam | Deputyt.Principal | S.L.T.S.I |
| Mrs.V.Paramanathan | Sp.Tr.Primaray Education | S.L.T.S.I |
| Mr.K.Thavayogarajah | Sp.Tr.Hinduism | S.L.T.S. 2-I |
| Mrs.S.Sivabalasegaram | Sp.Tr.Primary Education | S.L.T.S.2-II |
| Mrs.S.Suntharalingam | Sp.Tr.Primary Education | S.L.T.S.2-I |
| Mrs.V.Panchadsaram | Sp.Tr.Primary Education | S.L.T.S.2-I |
| Mrs.V.Mohalingam | Sp.Tr.Primary Education | S.L.T.S.2-II |
| Mr.V.Lingeswaran | Sp.Tr.Primary Education | S.L.T.S.2-II |
| Mrs.R.Baskaran | Sp.Tr.Primary Education | S.L.T.S.2-II |
| Miss.S.Sakunthala | Sp.Tr.Primary Education | S.L.T.S.2-II |
| Mr.N.Nanthakumar | Sp.Tr.Primary Education | S.L.T.S.2-I |
| Miss.S.Gayathiri | Sp.Tr.Primary Education | S.L.T.S.2-II |
| Mrs.S.Sriranganathan | Sp.Tr.Primary Education | S.L.T.S.2-II |
| Mrs.G.Kanagarajah | Sp.Tr.Primary Education | S.L.T.S.2-II |
| Mrs.K.Srimurugathas | B.A. | S.L.T.S. 2-I |
| Miss.R.Sivagowri | Sp.Tr.Music | S.L.T.S.2-I |
| Mrs.N. Nanthakumaran | B.A.Dip.in Ed. | S.L.T.S. 2-II |
| Mrs.S.Anchalan | B.Com, Dip in Ed. | S.L.T.S. 2-II |
| Mrs. S.Sivanathan | B.A. | S.L.T.S. 2-II |
| Mrs.T.Suthakaran | B.A. | S.L.T.S. 2-II |
| Mrs.S.Sathiyanandan | Part time English Teacher | |
| Mrs.S.Kananathan | B.A. (Temporary Attachment) | |

# நன்றிக்குரியவர்கள்.......

✦ புதிய கட்டடத்தில் இந்து ஆரம்ப பள்ளி ஒளிர காணியை கொள்வனவு செய்து வழங்கிய இந்துக்கல்லூரியின்பழைய மாணவர் ஆசிரியர் சங்க லண்டன் கிளையினர் முதற்கண் நன்றிக்குரியவர்கள்

✦ சகல வசதிகளுடனான அழகிய கட்டடத் தொகுதியை குறுகிய காலத்தில் திறமையான முறையில் ஆக்கி வழங்கிய சுவிஸ் நிறுவனத்தினர் என்றென்றும் நன்றி கூறிப் பாராட்டப்படவேண்டியவர்கள்.

✦ இம்மலர் சிறப்புற ஆசியுரைகள் வழங்கி ஊக்கமளித்த சமய குருமார்கள், அரச உயரதிகாரிகள், கல்விமான்கள் யாவரும் நன்றிக்குரியவர்கள்.

✦ பாடசாலை புதுப்பொலிவுடன் அமைய பலவகையிலும் உதவி வரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மணாவர்கள் யாவரும் நன்றிக்குரியவர்கள்.

✦ பாடசாலையின் அனைத்து நிகழ்வுகளிலும் முன்னின்று உழைக்கும் அதிபர் ஆசிரியர்களும் பாராட்டப்படவேண்டியவர்கள்.

✦ கட்டடத்திறப்பு விழா சிறப்புற அமைய பொருள் பண வசதிகள் வழங்கி ஊக்கமளித்த சாவகச்சேரி வர்த்தகர்கள், வங்கி சார் ஊழியர்கள்,சாவகச்சேரி, கொடிகாமம் பலநோக்குக்கூட்டுறவு சங்கத்தினர் யாவரும் நன்றி கூறி வாழ்த்தப்படவேண்டியவர்களே.

✦ எமது புதிய பாடசாலையை அமைத்து உதவிய கட்டட ஒப்பந்தகாரர்கள் சக ஊழியர்களும் என்றென்றும் நன்றிக்குரியவர்கள்.

✦ மலரின் அட்டைப்படத்தினை ஆக்கி வழங்கிய யா சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு.நா.ராஜன் அவர்களும் நன்றிக்குரியவர்.

✦ இம்மலரினை அச்சிட்டு ஒழுங்கமைத்து வழங்கிய சாவகச்சேரி பொதிகை கொம்பியூட்டர் கிராபிக்ஸ் நிறுவனத்தினரும் நன்றிக்குரியவர்களே.


– மலர் ஆக்கக் குழு –



Children, the future of our nation
we are with you !
சிறுவர்களின்
எதிர்காலத்தை மேம்படுத்த
மக்கள் மனதறிந்த வங்கி
மக்கள் வங்கி
People's Bank
Sisu Udana
PEOPL
BANK
THE PULSE OF TH




தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கமானது கீழ்க்காண் பல அளப்பரிய சேவைகளை வழங்கி வருகின்றது
நுகர்ச்சி சேவை
கிராமிய வங்கி சேவை
கூட்டுறவு நகர் சிறப்பு கூட்டுறவு நகர்
மக்களுக்கான அளப்பரிய சேவை
தொலைத் தொடர்பு சேவையும் காகிதாதி விற்பனை நிலைய சேவையும்
எரிபொருள் நிரப்பு நிலைய சேவை
கட்டட பொருட்கள் விற்பனை சேவை
கூட்டுறவு தேநீர்சாலை
வாகன சேவை
கதிரை வாடகை சேவை
பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான மாதாந்த வேதனம் வழங்கும் சேவை.
துயரந்த வேளையில் நிறைந்த சேவை
தலைவர்,
பணிப்பாளர்,
பணியாளர்கள்.

மக்களுக்கு மனமார்ந்த சேவையை வழங்கும்
சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்
புதிய கட்டடத்தில் கால் பதிக்கும்
சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை
மேலும் பல சாதனைகள் படைத்து
தென்மராட்சியில் கல்வி ஒளி வீச
நல்வாழ்த்துக்கள் வழங்குவதில்
மகிழ்கின்றோம்.
தலைவர்,
பணிப்பாளர்,
பணியாளர்கள்.

# உங்கள் பிள்ளையின் சுபீட்சமான எதிர் காலத்திற்கு......

## சிறுவர் சேமிப்புக்கணக்கு



- உயர் வட்டி வீதம்
- தரம் 05 புலமைப்பரிசில் வெற்றியாளர்களுக்கு விசேட பரிசுத்தொகை


சகல பாடசாலைகளிலும் முதல் 3 இடங்களை பெறும் மாணவர்களுக்கு பணப்பரிசில்கள்

முதலாம் இடம் ரூபா 10 000.00
இரண்டாம் இடம் ரூபா 7 500.00
மூன்றாம் இடம் ரூபா 5 000.00

மாவட்ட மட்ட ஒவ்வொரு வெற்றியாளருக்கும் கணக்கு மீதி இரு மடங்காக அதிகரிக்கும்

சிறிய முதலீடு... குறுகிய காலம்... மன ஆறுதல்... பெரியவனானதும் பெரிய தொகை...

இசுறு
சிறுவர் கணக்கு




பிறந்த நாள் முதல் 18 வயது வரை
உங்களுடைய பிள்ளைகளுக்கு அபூர்வமான சேமிப்புத்திட்டம்

உங்களுக்கு ஏற்ற மாதிரி இரண்டு முதலீட்டுத் தெரிவுகள்


மாதாந்தம் (ரூபா100 முதல் ரூபா 2,500 வரை)
முழுத்தொகை (ரூபா 1,000 முதல் ரூபா 117,000 வரை)

வைப்பாளர்களுக்கு இலவச ஆயுள் காப்புறுதி

கொமர்ஷல் வங்கியின்
**இசுறு சிறுவர் சேமிப்புத் திட்டம்**

COMMERCIAL BANK
*Our Interest Is In You*

## இலங்கை வங்கி சிறுவர் சேமிப்புக் கணக்கு



உங்களதும், நாட்டினதும் நாளைய எதிர்பார்ப்பு இன்று உங்கள் அரவணைப்பில் உள்ள அன்பு குழந்தையாகும். உங்கள் குழந்தையின் எதிர்காலத்தைச் சுபீட்சமானதாக மாற்ற இன்றே இலங்கை வங்கியில் சிறுவர் சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

- சாதாரண சேமிப்புக் கணக்குகளை விட 1% மேலதிக வட்டி.
- 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறும் மாணவ மாணவிகளுக்கு ரூ 10 000/= பெறுமதியான 1250 பணப்புலமைப்பரிசில்கள். (பரீட்சை திகதிக்கு முன்பு ரண்கெகுளு கணக்கில் குறைந்த பட்சம் 2500/= ரூபா நிலுவையாக இருத்தல் வேண்டும்)
- நாடு பூராகவும் ஏற்பாடு செய்யப்படும் புலமைப்பரிசில் வேலைத்திட்டத்திற்கு பங்கு பெறும் வாய்ப்பு.
- கணக்குரிமையுள்ள குழந்தைக்கு பாரதூரமான விபத்து மற்றும் குறித்துரைக்கப்பட்ட 10 நோய்களில் ஒன்று தொடர்பாக குழந்தைக்கு ரூபா 100000/= வரையான இலவச வைத்திய காப்பீடு வழங்கப்படும்.
  அரசாங்க வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றால் நாள் ஒன்றிற்கு ரூபா 600/= வீதம் 30 தினங்களுக்கு வழங்கப்படும்.
- அவசர விபத்தின் போது கணக்கிலுள்ள நிலுவையைப் போல 10 மடங்கு அவசரக் காப்பீடு (ஆகக்கூடியது 500000/=)

ரண் கெகுளு

BANK OF CEYLON
BOC

பொதிகை கொம்பியூட்டர் கிறாபிக்ஸ்-சாவகச்சேரி.0602213517-phothigai@gmail.com